சுவாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ சபரிகிரிவாஷா

## சிறப்பு மலர் 2018



ஸ்ரீ சபரி யாத்திரைக் குழு
ஸ்ரீ பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலயம்
இராகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் நமசிவாய

சுவாமியே சரணம் ஐயப்பா

# ஸ்ரீ ஹரிஹரபுத்திர குருமணி விழா 2018



மலராசிரியர்

## குருசுவாமி ந. சிவராஜா குருக்கள்

ஐயப்பன் அடிமை

( அகில இலங்கை இந்து மத குருக்கள்)

ஸ்ரீ பச்சத்தண்ணிமாரியம்மன் கோவில் இராகலை

வெளியீடு

ஸ்ரீ சபரி யாத்திரைக் குழு

இராகலை

30.12.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் திருவடிக்கு காணிக்கை



முன்னவனே யானை முகத்தவனே! முக்திநலம்
சொள்ளவனே! தூய்மைச் சுகத்தவனே!
மன்னவனே! சிற்பரனே! ஐங்கரனே!
செஞ்சடையஞ் சேகரனே! தற்பரனே!
நின்தாள் சரண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2018 - மட்டக்களப்பு புனித தல யாத்திரையின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருசுவாமியின் 18ம் வருட குருபூஜையில்



## 2017 கார்த்திகை முதல் நாள் மாலையணியும் பூஜை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோரண வாயில்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மனித ஆற்றல் வளம் பெற்றுப் புதிய கண்டுபிடிப்புள் உலகில் மலர்ந்தாலும் மூலம் ஒன்றை நாம் மறந்துவிட முடியது.

இந்த ஆற்றலுக்கு வித்தாக, மூலமாக, முதன்மையாக விளங்குவது இறையாகும். அவனள்றி ஓர் அணுவும் அவையாது என்பது இறைவனே இவ்வுலகைப் படைத்து இவ்வுலகின்னண், புல், பூண்டு, புழு, பூச்சி என்று பின்னர் மனித உயரினத்தையே படைத்தான்.

படைத்த அந்த இறைவனுக்கு நன்றி சொல்லவே நாம் அவனை வணங்குகின்றோம். அவ்வணக்கத்துக்குரிய இறையின் முதல்வனாம், மூலவனாம், முதன்மையானவானம் பிள்ளையாரப்பனின், விநாயகரின், கணபதியின் அருட்கடாட்சம் பெற்றோர் இப்பூவுலகில் எல்லாப் பாக்கியத்தையும் புண்ணியத்தையும் பெற்றவராவர்.

ஆயிரம் வடிவங்களில் அந்த ஆண்டவனை நாம் வழிப்பட்டாலும் இந்து சமயத்திற்கு முதல்வனாம் பிள்ளையாரை தொழுதால் வாழ்வில் எல்லாப் பேறுகளையும் நாம் பெற முடியும். இது உண்மை.

அனைத்துத் தெய்வங்களின் அருட் பாடல்கள், ஆன்மீகக் கட்டுரைகள் நிறைந்த இம்மலர், ஐயப்பன், ஐயனார் புகழ் பாடவும், இறைவனின் அருள் ஆற்றலை அறிந்து கொள்ளவும் 200 பக்கங்களில் மலர்கின்றது. இம்மலர் கையில் கிடைத்தோரெல்லாம் பாக்கியம் பெற்றவராவர்ஃ

அறிவுப் பேழையாக, பக்திக் கடலாகப் பரிணமித்திருக்கும் இம்மலரினுள் உங்களை அழைத்துச் செல்வதில் மகிழ்கின்றோம்.

இப்பூம்பொழில் மலரை உருவாக்க உறுதுனை புதிந்த ஆன்றோரையும், அறிஞர்களையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

பக்திப் பரவலாக மலர்ந்துள்ள இம்மலரின் மனம் நுகர யாம் இனித் தடையாக இரோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

வாழ்க! வாழ்க !

ஸ்ரீ சபரி யாத்திரை குழு
இராகலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருசாமி ஆசியுரை

உலகிலே பல்வேறு வழிபாடு முறைகள் மனிதகுல மேம்பாட்டுக்கு தோன்றுகின்ற இன்று உலகமெங்கும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் முழு மண்டல விரதமிருந்து ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் அருளை காண சபரிமலை செல்கின்றனர் 1996ம் ஆண்டு முதல் ஐயனின் தரிசனம் காண எம் ஐயப்ப சுவாமியின் திருப்பாத கமலங்களை சிரம் தாழ்த்தி வணங்கி கொண்டு இம்முன்னுரையை எழுதுகின்றேன்.

சபரிமலை " இது ஆண்டவனின் பூலோக சொர்க்கம் ஆண்டவனின் வாழ்விடம்" என கேரள மாநிலம் கூறுகின்றது. பகவான் ஸ்ரீ ஐயப்பன் அவதரித்த மலை அந்தமலை சபரிகிரிமலை. இந்த புனித ஸ்தலங்களுக்கு சென்றால் தனக்கு தன்னை சார்தோருக்கும் கஷ்டங்கள் நீங்கி வாழ்வில் வளம் பெற்று பேரானந்த பெருவாழ்வ கிடைக்கபெறும் என்பது பக்தர்களின் நிலைபாடு.


அந்த வகையில் இனம், மதம், மொழி, ஜாதி வேறுபாட்டினை மறந்து அனைவரும் ஒன்று கூடி வழிபடுகின்ற ஐயனின் சபரிமலை யாத்திரை 5 சுவாமிமார்களுடன் ஆரம்பாமாகிய ஸ்ரீ சபரி யாத்திரை குழு ஐயனின் அருளாசியுடன் 100க்கும் மேற்பட்ட சுவாமிமார்களை கொண்டுள்ளது.

இந்நூலில் ஐயப்ப சுவாமியின் சரித்திர விளக்கங்களும் ஸ்ரீ ஹரிஹரசுதன் யைப்ப சுவாமியின் வரலாற்று தொகுப்பும் எமது இந்து மதத்தின் சிறப்பும் விரத அனுஷடான முறைகளும் ஆனந்தமிகு ஐயப்ப சுவாமியின் பக்தி பாமாலைகளும் மற்றும் பிற விளங்கங்களையும் தொகுத்து வழங்கியுள்ளேன்.

ஐயனின் அடியேனாகிய என்னால் வெளியிடப்படுகின்ற (ஸ்ரீ சபரிகிரிவாசா) நூலில் தவறுகள், பிழைகள், குற்றங்கள் இருப்பின் அதனை மன்னித்து அருள வேண்டுமென ஹரிஹரசுதன், ஐயன் ஐயப்ப சுவாமியை பிரார்த்தித்து ஐயப்ப குருசுவாமிமார்கள், ஐயப்ப சுவாமிமார்கள், ஐயப்ப அடியார்கள் அனைவருமே பொருத்தருள வேண்முமென வேண்டுகின்றன்.

ஐயனின் அருளாசியுடன் அம்மலரை வெளியிடுவதற்கு உறுதுணையாக நின்ற சுவாமிமார்களும், விளம்பரங்களை வழங்கிய விளம்பரதார்களும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2017 -திருக்கோணமலை புனித தல யாத்திரையின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சாரியர் திலகம் ஆகோர சிவாச்சாரியர் வாரத்துஜி
பிரம்மஸ்ரீ சி. கு. கணேசமூர்த்தீஸ்வர சிவாச்சாரியார்
அவர்களின் ஆசியுரை

சுவாமியே சரணம் ஐயப்பா என ஐயனை சரனாகதி அடையும் நல்லடியார்கள் வாழ்வில் துன்பங்கள் அனைத்தும நீங்கி பேரின்ப பெருவாழ்வு நல்கும் 5 மலை அரசன் மணிகண்ட தெய்வமாம் ஐயப்ப சுவாமியின் பெரும் பக்தரான இராகலை ஸ்ரீ பச்சத்தண்ணீ மாரியம்மன் ஆலய பிரதம குரு, குருசுவாமி சிவஸ்ரீ ந. சிவராஜா குருக்கள் ஐயா அவர்களினால் வழிநடாத்தப்படும் ஸ்ரீ சபரீ யாத்திரை குழு அடியவர்கள் அனைவரும் மென்மேலும் இறை உன்மையை உணரந்து இறை ஞானம் பெற்று வாழ்வில் மேன்மை அடைய வேண்டும்.


கலியுகத்தில் கொடுமைகள் பெருகி பொய், கோபம், பொறாமை, கொலை, கொள்ளை, காமவேட்கை போன்ற பெரும் பாவங்கள் செய்து மானிடர்கள் அஞ்ஞானத்தில் மூழ்கிச் செல்கின்றனர் இப்புத்தகமானது அவ்வாரானவர்களை நல்வழிபடுத்தி நல்லொழுக்க பாதையில் இட்டுச்செல்லும் ஐயப்ப சுவாமியின் அனைவரும் பயன்பெற வேண்டி குருசுவாமி மற்றும் சபரியாத்திரை குழுவினரின் முயற்சியே இப்புத்தகம் அவர்களின் நல் எண்ணம் ஈடேறவும் அடியவர்களிடையே அன்பு நிறைந்த ஆன்மீகம் பெருகவும் ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் பேரருள் கிடைக்கப் பிராத்தித்து எனது நல்லாசிகளை தெரிவிக்கின்றேன்.

" சர்வே ஜனஹா சுபினோ பவந்து"

இறைப்பணியில்
பிரம்மஸ்ரீ சி.கு. கணேசமூர்த்தீஸ்வர சிவாச்சாரியார்
ஸ்ரீ வீரசக்தி விநாயகர் தேவஸ்தானம்,
ஹாலிஎல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ආශිර්වාදය

රාගල පච්චතන්නි දේවාලයේ අධිපති නඩරාජා ශිවරාජා කුරුක්කල් තුමා විසිතුන් වතාවටත් මෙහෙයවන ඉන්දියාවේ සබරිමලේ අයියප්පන් දේවාලය වැඳ පුදා ගනිමින් ආශිර්වාද ලබාගැනීම සඳහා සිදු කරන වන්දනා ගමනට ආශිර්වාද ලබාදීමට හැකිවීම පිළිබඳව මාගේ සතුට පල කරමි.

ජාති ආගම් භේදයකින් තොරව ශිවාරාජා කුරුක්කල් තුමා රාගල ප්‍රදේශයට අපමණ ආගමික ජාතික හා සංස්කෘතික මෙහෙවරක් සිදු කරන බව දන්වනු කැමැත්තෙමි. රාගල ප්‍රදේශයේ සහ ජාතික ජාත්‍යන්තර වශයෙන් සාමයික කාර්ය භාර්යේදී මහා ශක්තියක් බවට පත්ව ඇති බවත්, විවිධ සංවිධානයන්හි හින්දු බැතිමතුන් නියෝජනය කරමින් තම අනුශාසනා සිදු කරන අතර, ජාතීන් අතර එකමුතුව හා සහයෝගිතාවය ඇති කිරීමට ක්‍රියා කරන බවද සඳහන් කරණු කැමැත්තෙමි.

මෙතුමා මූලිකවම වාර්ෂික වශයෙන් සිදු කරණ මෙම වන්දනා ගමන සඳහා සිංහල දෙමළ ආදී විවිධ ජාතීන් සහභාගි වන අතර, මාස කීපයක් තිස්සේ ආගමික උපවාසයක හා ශීල ව්‍රතයක යෙදෙමින් කරන මෙම වන්දනා ගමනට අපගේ ආශිර්වාදයත් සියළු දෙවියන්ගේ සහ තුණුරුවන්ගේ ආශිර්වාදයත් ලැබේවායි ප්‍රාර්ථනා කරමි.

විහාරාධිපති
පූජ්‍ය පිටිගල වජිරහිමි
ශ්‍රී ශාරිපුත්‍රාරාමය රේවත පිරිවෙන
රාගල
හල්ග්‍රන්ඔය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## දේවාශිර්වාදය හා සුභපැතුම්

රාගල ශ්‍රී පච්චත්තන්නි මාරිඅම්මාන් දේවස්ථානයේ කුරුක්කල් නඩරාජා ශිවරාජා ගුරු ස්වාමි විසින් 23 වන වරටත් ඉන්දියාවේ කේරල ප්‍රාන්තයේ පිහිටුවා ඇති ශ්‍රී සබරිමලෙයි අයියප්පන් ස්වාමි දේවස්ථාන උත්සවය සදහා පිටව යන බව දැන ගැනීම සතුටට කරුණකි.

මෙහි ඇති සුවිශේෂි වැදගත්කම වන්නේ මෙම වන්දනාමාන චාරිකාව සඳහා හින්දු බැතිමතුන් පමණක් නොව බෞද්ධ බැතිමතුන්ද මෙම කුරුක්කල් ස්වාමි විසින් සහභාගිකරවා ගැනිමයි.

2019.01.05 දින පිටව යන මෙම වන්දනාමාන චාරිකාව මාසයක පමණ කාලයක් උපවාස කර පිටව යාමට නියමිතව ඇත.

ඉන්දියාවේ කේරළ ප්‍රාන්තයේ පිහිටුවා ඇති ශ්‍රී සබරිමලෙයි අයියප්පන් ස්වාමි දේවස්ථාන උත්සවය සදහා සහභාගි විමට පිටව යන ශ්‍රී පච්චත්තන්නි මාරිඅම්මාන් දේවස්ථානයේ කුරුක්කල් නඩරාජා ශිවරාජා ගුරු ස්වාමිට හා අනෙකුත් සියලුම ආගමික බැතිමතුන් හට ආශිර්වාදය ලැබේවායි මා ප්‍රාර්ථනා කරමි.

ඒ.ඩී. කාරියවසම්
ජ්‍යෙෂ්ඨ/ප්‍රධාන පොලිස් පරික්ෂක
පොලිස් ස්ථානාධිපති
රාගල

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Message from
Maturata Plantations
Deputy General Manager**

I hereby take this opportunity to convey my sincere appreciation to Rev.S.Sivaraj Kurukkel- Chief Priest of Sri Patchathanni Marriyamman Temple, which is situated Nuwara Eliya, District Ragalla Group for the 22nd Successful tour to obtain blessing of Sabarimalai Iyappan Temple in Keralla, India.

I wish him all Success for the Tour

T.Wickramasinghe
Deputy General Manager
Maturata Plantations Limited

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசியுரை

ஐயன் அருள்நாடி அருள் பெற்று நலம் வாழும் உய்யும் உருபெற்று உலகாளும் சுவாமிகளே

ஐயப்பனுக்கு ஆலயத்தை அவ்வழி கண்டு ஐயன் ஐயன்மாருக்கு நவநீதன் வழிகாட்டி கொன்டனரே தான் பெற்ற சுமையை தானே சுமந்து தான் கண்ட இஷ்ட இன்பம் தம் வையகமும் பெறும் பொருட்டு ஐயன்மாரை கூட்டி வழிநடத்தி கொண்டு சென்றார். ஐயனிடம் செல்லும் வழிப்பயணம் சுபமாக நடத்திடவே ஐயனை தினமும் பிராாத்தனை செய்தேம்.

நுவரெலியா மாவட்ட இராகலை ஸ்ரீ சபரி யாத்திரை குழுவினரால் சபரிமலை பயணத்தின் பயனால் வெளியிடப்படும் இம்மலர் அனைவர் மனதிலும் மலர இறைவனை வேண்டி எனது ஆசியுரையை நிறைவு செய்கிறேன்.

சுவாமியே சரணம் ஐயப்பா.

சிவஸ்ரீ பூ அகிலன் சுவாமி
தலவாக்கலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


ஐயப்பன் வரலாறும் கட்டுரைகளும் 01

ஐயப்பன் வரலாறும் காட்டும் அரிய தத்துவம் 14

மாலை அணிந்த ஐயப்ப இல்லங்களில் பெண்களின் கடமைகள் 19

சாஸ்தாவின் ஆறு அவதாரங்கள் 20

துறவன் பூண்ட ஐயப்பனுக்கு ஆபரணம் பூனுவது ஏன்? 21

பஞ்ச சாஸ்த்தா கோவில்கள் 22

பேட்டை துள்ளல் 27

புண்ணியம் நல்கும் வணயாத்திரை 28

பல வருடம் மலைக்கு சென்றும் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை ஏன்? 32

விபூதி அணிவதன் சிறப்பு 33

விரதம் அனுஷ்டிப்பது 33

பூஜை முறைகள் 34

ஏன் படுக்கையில் தலையனையை நீக்கி சிறு துண்டை மட்டுமே தரையில் விரித்து துயில வேண்டும் 36

பாதணி ஏன் அணிய கூடாது

ஸ்ரீ ஐயப்பன் வரலாறும் விரத மகத்துவமும் 37

ஸ்ரீ ஐயப்பன் மாலை போடும் போது சொல்ல வேண்டிய மந்திரம் 38

தோத்திரப் பாடல்களும் பஜனைகளும் 39

பிள்ளையார் பாடல்கள் 56

முருகன் பாடல்கள் 61

சிவன் பாடல்கள் 64

ராமன் பாடல்கள் 73

கிருஸ்ணன் பாடல்கள் 78

ஐயப்பன் தோத்திரப் பாடல்கள் 83

வாபர் சாமி பாடல்கள் 104

கருப்ப சாமி பாடல்கள் 107

வழிநடை சரணம் 109

ஹரிவராசணம் 113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐயப்பன் வரலாறும் கட்டுரைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் சரித்திரம்



மலைவளம் மிக்க கேரள தேசத்தில் பண்டைய திருவிதாங்கூரில் பந்தள நாடு என்னும் வளமான நாடு அமையப் பெற்றிருந்தது. இந்தப் பந்தள நாட்டை இராஜசேகர பாண்டியன் என்னும் பாண்டி வம்ச மன்னன் ஆட்சி செய்து வந்தான்.

வீர தீர பராக்கிரமத்தில் வல்லவனான இவன் மனுதர்மப்படி மிக்க நீதி நேர்மையுடன் மக்களுக்கு எவ்வித குறைபாடும் வராவண்ணம் அரசாட்சி புரிந்து வந்தான்.

மக்களின் குறைகளைத் தீர்த்து மகிழ்ச்சி பொங்கச் செய்த இராஜசேகர பாண்டியன் தனக்கு பின் நாட்டை ஆள ஒரு ஆண் வாரிசு இல்லையே எனும் மிக பெரிய மனக்குறை இருந்து வந்தது.

மன்னன் இராஜசேகரன் சிறந்த சிவபக்தன் எனவே அவனும் இராணியும் அனுதினமும் சிவபெருமானை வழிபட்டு தம் மனக்குறை தீர்த்தருள வேண்டி வந்தனர்.

மன்னன் மீது அளவு கடந்த அன்பு கொண்ட குடிமக்களும் மன்னனுக்கு வாரிசு உருவாக வேண்டும் என சகல தெய்வங்களையும் தியானித்து வந்தனர்.

ஒரு காலத்தில் அரம்பன் என்றொரு கொடிய அரக்கன் இருந்தான் அவனுடைய மகன் மகிஷாசுரன் எனப்பட்டான். மகிஷாசுரன் பிரம்மாவை மனதில் தியானித்து நீண்டகலமாக தவம் புரிந்தான். அவனது தவம் உறுதியும் வலிமையும் மிக்கதாகவே இருக்கவே இறுதியில் பிரம்மா அவன் முன்தோன்றி " உனக்கு என்ன வரம் வேண்டும்" எனக் கேட்டார்.

மிகஷாசுரனும் சந்தோஷம் பொங்கிட "இந்த பூமியில் பிறந்த எவராலும் நான் கொல்லப்படக்கூடாது" என்று வரம் கேட்டான் பிரம்மாவும் தட்டாமல் வரத்தை அளித்துவிட்டு மறைந்தார்.



மகிஷாசுரன் தான் பெற்ற வரத்தை மிகவும் தவறான முறைகளில் பிரயோகம் செய்தான். மனிதர்களை துன்புறுத்தினான். பூலோகத்தை ஆட்டுவித்ததோடு தேவலோகத்திலும் சென்று தேவர்களுக்கும் கடும் தொல்லைகள் தந்தான்.

மகிஷாசுரனிக் கொடுமைகள் எல்லை கடந்து செல்வதைத் தாங்க முடியாமல் தேவர்கள் எல்லோரும் கூடி மும்மூர்த்திகளாகிய பிரம்மா, சிவன் விஷ்ணுவிடம் முறையிட்டு தங்களைக் காத்தருளும்படி வேண்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது மகிஷாசுரன் பெற்ற வரம் வலிமையால் மும்மூர்த்திகளும் தாங்கள் தனித்தனியாக போரிட்டால் அவனை வெல்லுவது இயலாதது என உணரந்தனர்
எனவே நன்கு ஆலோசித்து ஒரு உபாயம் செய்தனர். மும்மூர்திகளும் தத்தம் சக்திகளை ஒன்று சேர்த்து சண்டிகாதேவி என்ற மகா வலிமை மிகுந்த சக்தியைப் படைத்து மகிஷாசுரன் மேல் வதம் செய்ய ஏவி விட்டனர்.

சண்டிகாதேவி மகிஷாசுரன் முன் தோன்றி மிகவும் கடுமையாக போர் புரிந்து அவனை அழித்தாள் தேவர்களும் மானிடர்களும் துன்பம் நீங்கி மிகிழ்ச்சி மலரப் பெற்றனர்.

மகிஷாசுரனின் தந்தை அரம்பனுக்கு சகோதரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் கரம்பன் மிகவும் கொடூர குணம் படைத்த கரம்பனுக்கு மகிஷி என்றொரு புத்திரி இருந்தாள் அவள் தனது அண்ணன் மகிஷாசுரன் அழிக்கப்பட்டதை எண்ணி மனம் வருந்தினாள்.

தேவர்களை பழிவாங்கத் திட்டமிட்டாள். அதற்கான சக்தியைப் பெற பிரம்மாவை தியானித்து கடுமையான தவத்தில் ஈடுபட்டார்.

அவளது தவ வலிமை பிரம்மாவை குளிர வைத்தது. மகிஷி முன் தோற்றிய பிரம்மா, " பெண்ணே! என்ன வரம் வேண்டும் கேள்? " என்றார்.

மகிஷி "எனக்கு சிவன் விஷ்ணு அம்சம் பொருந்திய புத்தினைத் தவிர வேறு எவராலும் என் மரணம் நிகழ்க்கூடாது" என வரம் வேண்டினாள், பிரம்மாவும் அவ்வாறே வரம் அளித்து மறைந்தார்.



வரம் பெற்ற மகிஷி தன்னை அழிக்க எவராலும் முடியாது என்ற கர்வத்துடன் தேவலோகம் அடைந்து அங்கு தேவர்களை கொடுமைப்படுத்தத் தொடங்கினாள்.

துர்வாசர் என்ற மாமுனியின் சாபத்தால் தேவர்களுக்கு நரை தோன்றியது. அதனால் ஆயுள் சுருங்கி அழிந்து விடும் நிலை ஏற்பட்டது இச்சாபத்தை போக்க அரசுர்களின் துணையுடன் பாற்கடலைக் கடைத்து அமுதத்தை எடுத்தனர். அப்போது அசுரர்கள் பாய்ந்து கலசத்தை பறித்துக் கொண்டனர்.

அதை அசுரர்களிடமிருந்து தந்திரமாக திரும்பப் பெற மகாவிஷ்ணு மோகினி வடிவம் எடுத்தார். அப்போது மோகினி வடிவத்தின் மாயையில் ஏமாந்து அசுரர்கள் அமுத கலசத்தை மோகினியிடம் கொடுத்தனர். மகாவிஷ்ணு அதை தேவர்களிடம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவிஷ்ணுவின் மோகினி வடிவத்தின் சுந்தரரூபத்தை கண்ட சிவன் மோகினியுடன் ஐக்கியமானார். அதன் பயனாய் ஓர் அழகிய ஆண் குழந்தை தோன்றியது. குழந்தையின் கழுத்தில் சிவன் ஒரு மணிமாலையை அணிவித்தார்.

பின் அத்தெய்வக் குழந்தையை சிவன் தன் பக்தனான இராஜசேகர பாண்டியனிடம் ஒப்படைக்க எண்ணம் கொண்டார்.

மன்னன் இராஜசேகரன் பம்பா நதி தீரத்தில் வேட்டையாடச் செல்வது வழக்கம். அதுபோல தன் பரிவாரம் சூழ பம்பா நதி தீரம் அடைந்த போது அந்த வனாந்தரத்தில் அழகான ஒரு ஆண் குழந்தை சிரித்தபடி கிடப்பதை கண்டான்.

குழந்தையின் தெய்வீகக் களையும் சிரிப்பும் பார்த்து அதிசயித்து நின்ற மன்னனை நோக்கி ஒரு முனிவர் வந்தார்.

"மன்னா! சிவன் உன் குறை தீரக்க அனுப்பியுள்ள தெய்வீகம் பொருந்திய குழந்தை இது. இவனை எடுத்து நீ வளர்த்து வா. இவன் கழுத்தில் சிவன் மணிமாலை இருப்பதால் மணிகண்டன் எனப்பெயரிடு . பனிரெண்டு வயதில் இவனால் பல அதிசயங்கள் நிகழ்த்தப்படும். இவன் இப்பூவுலக மானிடர்களுக்கு தெய்வாமாக விளங்குவான்" எனக் கூறி மறைந்தார்.

தான் வணங்கிய சிவன் தனது மனக்குறை நீங்கியது கண்டு சந்தோஷம் அடைந்து அக்குழந்தையை வாரி அணைத்து எடுத்து அரண்மனை வந்தான் இராஜசேகரன்.

குழந்தையைக் கண்ட ராணிக்கு மனதில் சொல்ல முடியாம அளவு ஆனந்தமும் திகைப்பும் தோனறியது. இருவரும் சிவனின் மகிமையை எண்ணி பெருமைப்பட்டனர்.

பந்தள நாட்டு மக்களுக்கு மன்னன் வாரிசு கொண்டு வந்த செயதி தேனாய் இனித்தது. மக்கள் அனைவரும் ஆனந்தத்துடன் ஆடிப்பாடி கொண்டாடினர்.

அதே சமயம் அரண்மனையில் ஒருவனுக்கு மட்டும் மன்னன் வாரிசாக குழந்தையை வளப்பது பிடிக்கவில்லை. அவன் பந்தள நாட்டு திவான். அவன் மன்னனுக்கு பின் தான் நாட்டை ஆள திட்டம் தீட்டி வந்தான்.

அவனுக்கு மணிகண்டன் மேல் வெறுப்பும் பொறாமையும் பெருகிக்கொண்டே வந்தது.

மணிகண்டன் சகல கலைகளும் கற்று நன்கு தேர்ச்சி பெற்றான். அவன் வில்வித்தை திறனை கண்டு அவனது குரு அகம் மகிழ்ந்தார். மணிகண்டன் சாதாரண பிறவி அல்ல. தெய்வப்பிறவி என உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தைகள் கற்று தேர்ந்தவுடன் மணிகண்டன் குருதட்சணை கொடுக்க வேண்டி குருவை அணுகினான். அப்போது அவர். " மணிகண்டா! என மகன் பிறவி

ஊமையும் குருடுமாக உள்ளான். அவனுக்கு நீ பார்வையும் பேச்சும் பெறச் செய்து அருள வேண்டும். இதுவே நான் கேட்கும் தட்சணை" என்றார்.

மணிகண்டனும் அகமகிழ்ந்து அவ்வாறே குருவின் மகனுக்கு பேசும் சக்தியும் பார்க்கும் சக்தியும் அளித்து விட்டு "எனது இந்த ஆற்றலை எவரிடமும் தெரிவிக்கக் கூடாது காலம் அதை வெளிப்படுத்தும் " என்று கூறி குருவை வணங்கி விடைபெற்றுக் கொண்டான்

சிறிது காலத்தில் அரண்மனையில் ராணிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

குருகுலம் முடித்து திரும்பிய மணிகண்டனுக்கு இராஜசேகர பாண்டியன் இளவரசு பட்டம் கட்ட தீர்மானித்தான்.

மன்னனின் இந்த திட்டம் திவானை கொதிப்படைய வைத்தது. மணிகண்டனை விஸம் கொடுத்து கொல்லத் திட்டம் தீட்டினான். அவன் கொடுத்த விஷம் மணிகண்டனை ஒன்றும் செய்யமாமல் போகவே ஏமாற்றமும் ஆவேசமும் அதிகமானான் திவான்.

ராணியையும் தூண்டி மணிகண்டனை கொல்ல வஞ்சக வலை வீசினான். " ராணியாரே! உங்கள் சொந்த மகள் இருக்க காட்டில் கிடைத்த அநாதைப் பயலுக்கு முடி சூட்டுவது நல்லதல்ல என் கூறி ராணியின் மனதை மாற்றினான்.

ராணியும் தன் "மகனுக்குத்தன் முடி சூட்ட வேண்டும்" என வைராக்கியம் கொண்டு திவான் சொல்கேட்டு மதிமயங்கி மணிகண்டனை அழிக்கும் காரியங்கள் செய்யத் தொடங்கினான்.



திவானும் ராணியும் கூடி மணிகண்டனைக் கொல்ல சதி திட்டம் ஒன்று தீட்டினர் அத்திட்டப்படி ராணி திடீரென தவைலி தாக்கியது போல நடித்து படுக்கையில் வீழ்ந்தான்.

திவான் மருத்துவர் ஒருவனை தயார் செய்து அனுப்பினான்.

அவன் கூறியப்படி மருத்துவர் ராணியின் தலைவலியை தர்க்க ஒரே ஒரு மருந்துதான் உள்ளது. புலிப்பால் வேண்டும் புலியின் பால் பருகிய மாறுவினாடி தலைவலி நின்று விடும், எனக் கூற மன்னன் திடுக்கிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சாதாரண மனிதனால் முடியக் கூடிய காரியம் இல்லையே! என்ன செய்வது? எனப் புலம்பினான்.

புலிப்பால் கொண்டு வந்து தருபவர்க்கு தன் நாட்டில் பாதி கொடுக்கப்படும் என பறை அடித்தான் எனினும் காட்டுக்குச் சென்றவர் எல்லாம் தோல்வி கண்டு திரும்பினர்.

ராணியின் நோய் நீங்காமல் இருப்பது இராஜசேகர மன்னனுக்கு மிகவும் துக்கம் அளித்தது.

"எவராலும் புலிப்பால் கொண்டு வர முடியாதோ?" என மனதில் வெந்து கொண்டிருந்தான்.

தந்தையின் துக்கத்தை கண்ட மணிகண்டன், தந்தையே! நான் புலிப்பால் கொண்டு வருகிறேன். எனக்கு ஆசி கூறுங்கள் என வேண்டி நின்றான்.

மன்னன் பதறி விட்டான் அவன் மேல் உள்ள பாசத்தால் அவனைத் தடுத்தான்.

அதற்கு மணிகண்டன் "எனது தாயின் இன்னலை தீர்க்க மகன் எனக்கு கடமை இருக்கிறது. நான் அவசியம் போயாக வேண்டும். என்னை அனுமதியுங்கள்". என வேண்டி கேட்டுக்கொண்டான்.

அரசனுக்கு மணிகண்டனை விடை கொடுத்து அனுப்ப மனம் ஒப்பவில்லை. வேண்டாவிருப்பமுடன் மணிகண்டனை காட்டுக்குச் செல்ல அனுமதித்தான்.

மணிகண்டன் புலிப்பால் வேண்டி காட்டுக்குள் நுழைந்தான். அவனுக்கு சிவனின் பூதகணங்கள் துணையாக வந்தன.

தேவர்கள் அமுத கலசத்தை பெற்று உண்டு ஆயுள் அதிகரித்துக் கொண்டதனால் ஆத்திரம் பெற்ற மகிஷி சொர்க்கலோகம் சென்று தேவர்களை கொடுமைப்படுத்தி வந்தாள்.

இதனை தன் உள்ளுணர்வால் உணரந்த மணிகண்டன் தன் அவதார ரகசியம் புரிந்து கொண்டான்.

தேவலோகம் சென்று அங்கு தொல்லை தந்த கொண்டிருந்த மகிஷியை தூக்கி பூலோகத்தில் வீசினான் மகிஷி அழுதையாற்றின் கரையில் வந்து வீழ்ந்தாள். அங்கு மகிஷியுடன் மணிகண்டன் கடுமையாக போரிட்டு வெற்றி கண்டான்.

மகிஷியை கொன்று தன் அவதார நோக்கத்மின் வல்லமையை நிறைவேற்றிக் கொண்ட மணிகண்டன், அடுத்து புலிப்பால் கொண்டுவர இருண்ட காட்டுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுருவி சென்றாள்.

புலிகளைத் தேடி காட்டுக்குள் அலையும் மணிகண்டனுக்கு உதவ இந்திரன் முதாலான தேவர்கள் மகிஷியை கொன்ற நன்றிக்கடனுக்காக உதவி செய்ய நினைத்தனர்.

சிவபெருமான் மணிகண்டன் முன் தோன்றி "இந்திரன் ஆண் புலியாகவும் மற்ற தேவர்கள் பெண் புலியாகவும் வடிவெடுப்பார்கள்." நீ புலி மீது அமர்ந்து அரண்மனை செல்" எனக்கூறி மறைந்தார்.

சிவனின் கூற்றுப்படியே ஆண்புலி மீதமரந்து பெண்புலிகள் புடைசூழ மணிகண்டன் நாட்டிற்குள் பிரவேசித்தான்.

இதனைக் கண்ட மக்கள் திகைப்பும் பயமும் அடைந்தனர்.



புலி மீது வரும் பாலகன் மணிகண்டன் தெய்வமே அன்றி வேறில்லை என மக்கள் நொடியில் புரிந்து கொண்டு வழிபட்டனர்.

மணிகண்டன மெல்லிய புன்சிரிப்புடன் அரண்மனை நோக்கி புலி பட்டாளத்துடன் சென்றான்.

நாட்டுக்குள் மக்கள் மகிழ்ச்சி கோஷம் கேட்டு ஆச்சரியம் அடைந்த இராஜசேகரபாண்டியன் தூரத்தில் மணிகண்டன் புலிமேல் பவனி வருவது கண்டு அதிசயித்தான்.

பனிரெண்டு வயதில் இவனால் அற்புதங்கள் நிகழுந்தப்படும் என முனிவர் கூறியது மன்னன் மனதில் நிழலாடியது.

அரண்மனைக்குள் நுழைந்த மணிகண்டன் தந்தையே! புலிகளைக் கொண்டு வந்துவிட்டேன். வைத்தியரை அழைத்து புலிகளின் பாலைக் கறந்து கொடுத்து தாயின் நோயைத் தீருங்கள் எனக் கூற மன்னன் மணிகண்டன் காலடியில் சாஷ்டாங்கமாய் விழுந்தான்.

பகவானே! தங்களை காட்டுக்கு அனுப்பச் செய்த சதியை நான் கண்டுபிடித்து விட்டேன். நான் தவறு செய்திருந்தால் மன்னித்தருளுங்கள். புலிகளை காட்டுக்கு அனுப்பி விடுங்கள். இனியும் என்னை சோதிக்க வேண்டாம் என வேண்டி நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் சொற்களைக் கேட்டு மணிகண்டன் புன்முறுவல் செய்தபடி எல்லாம் என் இச்சைப்படியே நடந்துள்ளது. இந்த பூமியில் நான் பிறந்த கடமை முடிந்துவிட்டது இனி நான் தேவலோகம் செல்கிறேன்" எனக் கூறினான்.

அதைக் கேட்டு மன்னன் அழுது புலம்பினான். பகவானே! தங்கள் நினைவாக ஒரு கோயில் கட்ட அடியேனுக்கு அனுமதி தர வேண்டும்.

அதை எங்கு கட்ட வேண்டும எனவும் தாங்களே கூற வேண்டும்" எனக் கூறி தொழுது நின்றான்.

உடனே மணிகண்டன் ஒரு அம்பை வில்லில் தொடுத்தான். இந்த அம்பு போய் விழும் இடத்தில் எனக்கு கோவில் எழுப்பு" என்று கூறி அம்பை விட்டான்.

அம்பு வானைக் கிழித்தபடி சீறிப்பாய்ந்து சபரிமலை பிரதேசத்தில் விழுந்தது. மன்னன் அகமகிழ்ந்து கோவிலை உருவாக்கினான்.

மணிகண்டன் எனக்கு பதினெட்டு படிகளுடன் கிழக்கு நோக்கியும், பக்கத்தில் மாளிகைப் புறத்தம்மனுக்கு கோவில் கட்டு" எனக்கூறி தேவலோகம் சென்றான்.

இராஜசேகரபாண்டியன் மணிகண்டனின் உத்தரவுப்படி தானே முன்நின்று சபரிமலையில் பதினெட்டு படிகளுடன் சந்நிதானம் அமைத்து அழகிய கோயிலை உருவாக்கினான்.

ஜாதி மத பேதமின்றி, மாலை அணிந்து ஆண்டு தோறும் பல லட்சம் மக்கள் 41 நாட்கள் கடும் விரதம் அனுசரித்து ஐயனை தரிசிக்கின்றனர்.

ஐயனின் பூஜைக்கு நெய் நிரப்பிய தேங்காய், பூஜை பொருள்கள் அடங்கிய ஒரு முடியும், நடக்கும் வழியில் தேவைப்படும் உணவுப் பொருள்கள் ஒரு முடியும் ஆக இருமுடி கட்டி ஐயப்பனின் நாமம் சொல்லி கல்லும் முள்ளும் மெத்தையாக நடந்து வருகின்றனர்.

பம்மையில் நீராடி சபரி மலை அடைந்து புனித பதினெட்டு படி ஏறி ஐயப்பன் அருள் பெறுகிறார்கள்.

ஆண்டுதோறும் மகர சங்கராந்தியில் ஜோதி உருவில் காட்சி தந்து தம் பக்தர்களை ஆட்கொண்டு இன்னல்கள் தீரத்து சகல நன்மைகளும் செய்து அருள் புரிந்து வருகிறார் கலியுகக் கடவுள் ஐயப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# History of Swamy Ayyappa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# History of Swamy Ayyappa



In the good old days there was a country called Pandala Naadu, which was provice in the State of Traveancore, Pandala Naadu was ruled by king Rajasekaran Pandya whose ancestors were Pandya Kings, Rajasekara Pandya wa powerful ruler. He excelled in all the martial arts. Since Rajaskeara was a noble king his people were very happy within ther state, Evernthrough the king had a beautiful Queen and good citizens, he suffered a lot as he has no child to step into hsi shoes to rule the country Cituzens of Pandala Naadu too grived much as their beloved king had no issues. King Rajasekara was an an ardent follower of Lord Shiva. He and his queem daily prayed to Lord Shiva to bless them with a child, People of Pandaala Naadu also continued their prayersforthe same.

There was a demon Called Aramba, Aramban had a son named Mahishasura. Mahishasura was on penance for a long time praying to Lord Brahma Lord Brahma tried to perturb his penance but in vein. And a last Lord Brahama was plased with Mahishasura was very much pleased on the gesture of Lord Brahma. He expressed his desire to Lord Brhma. Nobody born on the earth should not kill me pleaded Mahishasura Since he cannot be killded by anyone on the earth,Mahishasura musuded his blessings and harassed many a people on eatrh and in the Heavens, Human beings as well as Heavenly saints suffered a lot His atrocities were intolerable.



Their condition was miserable and they rushed for help from Mummoorthies viz Lord Shiva, Lord Brhama and Lord Vishnu to their dismay the Mummoorthies felt that they could not defeat Mahishsura if they fought with him induvidullay. Despite thes they found a solution to this problem. They created a lady called Chandika Devi with all of theri powers cherished in her. Chandika Devi fought with Mahishasura and he was perished to death Saints and Human beings celebrated the end of Mahishasura.

Aramban had a brother Karamban by name. Karamban's daughter was Mahishi. Mahishi felt very much for Mahishasura She resolved to take revenge on theose who were instrumental for the death of Mahishasura.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

To get the power for this purpose she prayed to Lord Brahima. Lord Brahma was pleased with Mahishi's penance. He offered to bless her. Mahishi prayed for an unusual blessing. She demanded, " I should not be killed by anyone other than the son of Lord Shiva and Lord Vishnu". Lord Brahma okayed her will. On getting Loard Brahma's Blessing Mahishi Statted embarrassing Human Beings and the Hliy saints.

The Heavenly saints were suffering from the evil effects of Durvasas curse. They were trying to obtain eternal Nectar from the Milky Sea. In this effort, both the holy fruit. They were trying the holy saints and demons were toiling together. And their efforts bore fruit. They were abole to get the vessel containing the Nectar. All of a sudden it was snatched away by the demon. Seeing this unlawful act of the demons, Lord Vishnu Decided to teach them a lesson. He took the shape of a gotgeous lady and fooled the demons. In this process the was succeddul in getting back the Nectar to the saints. Lord Shiva heard about Lord Vishnu;s new avatar of Mohini ( Georgeous Lady ) and wanted to meet her. He was spell bounf. Mohini was so beautiful and Lord Shiva preferred to marry her. Due theri union, Mohini gave birth to a male child. Lord Shiva wanted to gift this child to King Rajasekara who is his devotee. Before reaching the earth, Lord Shia adorned the child with a garland of crystals.



King Rajsekara was on his hunting camp on the banks of Ramba river. He listened the cry of a child. Following the sound, he found the child. he was pleased to see the chid. Suddenly there appeared a saint. The Saint uttered to Rajasekara, "This child will fulfill your desire for an issue of your own. You take him and bring him up. See the crystal gatland in his neck. Since he is wearing a garland of Mani (crystal) his name will be Manikanda. (Crystal Garland Necked). You will know this Child's birth when he attains the age of twelve" Saying this, the saint disappeared atonce.

Rajasekara's happiness was boundless. As he was issueless, he rejounced on getting this child. He felt like a blind getting sight. Rajasekara took the child to his queen, who also felt happy. The citizens of Pandala Naadu also celebrated this event as they had found a heir to rule the country. Everybody was very happy except the Diwan (military Commander). If there was no heir to the King, the Diwan might become the successor to the throne.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ManiKanda was sent to a Guru (Teacher). The guru taught him many

things, On seeing his talent, the guru realized that ManiKanda might to a divine child. On finishing his Studies, ManiKanda went to offer Guru Dakshana (Gift to the Teacher) to his teacher. Since the Guru was aware of the divintiy oof Manikanda, he preferred someother favour for him. The Guru refused to accept the gifts offered by ManiKanda. Instead, he asked to cure his blind and dumb son. ManiKanda belssed that boy and he got speech and sight. ManiKanda asked his guru not to discolse this miracle to anybody. Manikanda greeted his teacher and left fot the palace.

In the meantime, the queen too gave birth to a male child Rajasekara planned to crown Manikanda. Knowing this, the Diwan tried to poison Mani Kanda. His attempt failed miscerably. The Diwan approched the queen to elininate Maikanda, so that she could crown her own son. As the queen was very fond of her own son, she realdily acepted to co-operate with the Diwan.

Diwan revealed his plan Accordingly, the queen acted upon it. She pretended to be bothered by a severe head-ache Someone summoned the medicine man. He was an accomplice of the Diwan. As instruceted already, the medicine amdn informed that the hed-ache of the queen could only be cured with tiger's milk, Realising the difficulties in getting the wild cat's milk, King Rajasekara announced that he would readily offer half of his country to those who would bring tiger's milk. Attracted by this anoucement many able bodies men tried their luck. They could only spot the tiger. Nobody could milk it.

King Rajasekara worried a lot. ManiKanda came to his rescue. he came forward tofetch tiger's milk. King Rajasekara did not agree to send a child like Manikanda on this dangerous mission. But Mani kanda was adamant. He was ready to do anything to cure the queen. Half heartedly King Rajesekara admitted ManiKanda to go to the forest.

Manikanda started his journey. He was properly guarded bu the pancha boothas (Five Elements) who were sent by Lord Siva. Holy saints who had consumed the nectat gotrid of their infections. Mahishi was kindled by the holy saints there. Manikanda realized the sufferings of the saints in the hands of Mshishi, Pulled her down to the earh. thrown by Manikanda,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

she fell upon the banks of the Nectar River. Mahishi and Manikanda fought each other fiercely.
In the duel Manikanda triumphed Mahishi. Killing Mahishi was tge vasic aim of ManiKanda's avatar. Fulfilling this, ManiKanda proceeded to get thiger's milk. He wandered a lot searching for tigers.
Heavenly saints worshipped Manikanda for his brave attempt with Mahishi. Lord Shiva appeared before ManiKanda.

Lord Shiva informed that Indira ( the Leder of the Saints) would Change into a tiger and his followers would turn into tigresses.Manikanda could ride on these beasts to the palace. Witnessing Manikanda on tiger's back people fled in despair.

Kind Rajasekara too observed the feat. He ralized that Manikanda was not and ordinary child. Moreover, that was the day on which ManiKanda completed his twelth year. ManiKanda greeted his father and asked him to milk the thigers. Instead, the King fell on his kness. He pleaded Manikanda, the Lord not to test him anymore. He also informed that the conspiracy had come to ligh only after the departure ManiKanda. The King begged hisnpardon for the shameful act. ManiKanda consoled his father.

He added" Everything goes as per my wish. My mission has been competed. I will startfor my heavenly abode " At this point the king mad a note. He wished that a temple as a memorial to ManiKanda would be build and the exact location to be pointed out by ManiKanda. Hearing this plea, Manikanda took his bow. He sailed an arrow. he asked to build the temple on the place were his arrow struck the ground. That exact spot happens to be the Sabarimala. ManiKanda asked the King to build a temple there facing east witha shrine to Maligaipurathu Amman in the close proximity. Then he departed to the heavens.

Kings Rajasekara was eagerly involved in the building work. Guided by Agathiya the King Completed the construction of the temple with 18 steps. Every year Lakhs of devotees throng the temple. They observe severs fast for 41 days and reach the temple with ghree filled coconuts and other eatables. Chanting the name of Lord Ayyappa, the devotees cherish the blessings of Ayyappa. Every year on the eve of Mahara Sankaranthi, Lord Ayyappa appears in the form of Jyothi (light) and blesses his countless deveotees.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# අයියප්පන් දෙවියන්

බන්දල රට පාලනය කල පාන්ඩිය මන්නන් රාජසේකරන් ඔහුට දිගු කාලයක් ළමයින් නොමැති නිසා රජතුමා සහ දේවිය  ශිවදෙවියන්ගේ වරම් ඉල්ලා ඇත.

විෂ්නු දෙවියන්ගෙන් වරම් ලබාගත් මේ අතර නවුස් දම් පුරන අය අමරණීය වුනා පැමිනිලි කරනවා.  ඉන්පසු ශානිති දේවි විසින් අසුරය මරනයට පත් කරනවා ඒ අසුරයාගේ නංගි මහීෂා ඒ අයගෙත් පලි ගැනීමට බ්‍රහ්මයා මුණ ගැහෙනවා ඒ වාගේ විෂ්ණු/ ශිව දෙවියන්ගෙන් වරම් ලබා ගන්නවා ඔහුගේ ප්‍රතියෙකුට පමණක් අඩංගු වන ලෙස ඒ වරම ලැබෙනවා.

මහීෂා විසින් තවුසන්ට හිරිහැර කරනවා තවුසන් නැවත වරන් විෂ්ණු දෙවියන් මුන ගැහෙනවා විෂ්ණු දෙවියන් මෝහිනීගේ වෙස්ගෙන කවුසන්ට දුන් වස අරන් දැනවා මෝහිනී මහිෂා සමග එකතු වෙනවා ඒ අයට ලැබෙන පුත්‍රයා ධර්ම ශාස්ත්‍ර ශිවදෙවියන් ඇත්දල මාලයක් ධර්ම ශාස්ත්‍රහට කැගිදෙනවා.

මහීෂාගේ අවසානය වන්නේ ධර්ම ශාස්ත්‍ර අනිත් රාජසේකරන්ට ධර්ම ශාස්ත්‍රයන් භාර දෙනවා රාජසේකරන් ධර්ම ශාස්ත්‍ර පෑකුටියට ගෙන එනවා ඒ දෙදෙනා දඩයමේ යනවා බම්බෙයි නදියේ අසල ධර්ම ශාස්ත්‍ර දේව පුත්‍රයෙකු බව හඳුනා ගන්නවා ඊට පසු එම පුත්‍රයාව දේවියට පෙන්නනවා ඒ අය මනිකන්ඩන් යන නම තියනවා.

රජතුමා ඔහුගේ ශිල්ප ශාස්ත්‍ර සියල්ල උගන්නනවා ඒ අතර දෙවියට තවත් පුත්‍රයෙකු ලැබෙනවා ඊට පසු මනිකන්ඩන්ට අවු 12 දී ඔහුන්න දෙනවා එම දේවිය තමාගේ පුත්‍රයට ඔහුන්න දීමට කැමති වෙනවා මනිකණ්ඩන් විනාශ කිරීම දේවිය බොරුවට අසනීප වෙනවා එය සුව කිරීමට නම් කොටි කිරි අවශ්‍ය බව කියනවා.

මනිකන්ඩන් කොටි කිරි ගෙන ඒ මට කැලයට යනවා ඒ අසලට මහීෂා එනවා දෙදෙනා රංඩු වෙනවා ඒ අතර තමා දේව පුත්‍රයෙකු යැයි මහිෂාට කියනවා ඉන්පසු මහීෂාට ශාප කරනවා කෝවිලේ වැඩ කාරයෙකු ලෙස සේවය කිරීමට සබරි මලේ කෝවිලට යන ලෙස පවසනවා ඒ අවුරුද්දේ කන්නිසාමි සබරි මලේට යන්නේ (ඉන්ද්‍රන් කොටියා) (තවුසා කොටිදෙන) මනිකන්ඩන් කොටි කිරි ගෙන දේවියට ගෙන ගොස් දෙනවා රජතුමා ඔහුට ප්‍රසංසා කරනවා ඔහු මල්ලිට රජකම දෙනවා.

රජතුමා මනිකන්ඩන් කෝවිලක් සැදීමට ඔහුට කියනවා ස්ථානයක් ලකුණු කරන ලෙසට ඔහු ස්ථානයක් ලකුණු කරනවා ඒ තමයි සබරිමලේ මනිකන්ඩන් සබරිමලේ කෝවිලේ දෙවියන් බව අහසේ තරුවක වී අතික් අයට පෙන්වනවා අවු 18 වන  විට අම්මන් දෙවියන්ට වෙනම කොල්විලයක් සාදා දෙනවා මුළු අවුරුද්දේම මකරජෝති එළිය පෙන්නනවා ඒ ස්ථානය යන්න විසින් බඩුත් ධසවා ගෙන යැමට පවසන්වා.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் வரலாறு காட்டும் அரிய தத்துவம்

கடவுளை வணங்குவோருக்கு வேண்டியது கிடைக்கும். அப்படி கிடைத்ததை தவறான செயலுக்குப் பயன்படுத்தினால் தண்டனையும் உடனே கிடைக்கும். சாகாவரம் பெற்றவர்களுக்கு கூட ஏதோ ஒரு சக்தியதால் அழிவு நிச்சயம். நிலையற்றது இந்த வாழ்க்கை எனவே வாழும் காலத்தில் நல்லவனாய் வாழ்ந்துவிட்டால் மீண்டும் இந்த பிறவிப் பெருங்கடலை நீந்த வேண்டாம் என்ற அரிய தத்துவங்களை உணர்த்தும் தலம் சபரிமலை.

சபரிமலை ஐயப்பனின் வரலாற்றில் முதலில் ஆடம்பரமான அரண்மனை வாழ்வு இது நிலைத்ததா என்றால் இல்லை. தெய்வப் பிறவியனா ஐயப்பனுக்குக் கூட இந்த வாழ்வு நிலைக்கவில்லை என்றால் சாதாரண மனிதர்களான நமக்கு மட்டும் நிலைத்து விடுமா என்ன. எனவேதான் ஐயப்பன் கோயிலுக்கு செல்ல எளிமையான ஏற்றத் தாழ்வற்ற சீருடை அணிந்து ஒகன்று போல இருமுடி கட்டி ஒற்றுமையாய் கூட்டமாய் போய் அவனை வணங்கிவிட்டு வருகிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை மார்கழி ஆகிய இரு மாதங்களை நோன்பு இருக்கும் காலமாக ஏற்றுக் கொள்ளக் காரணம் என்ன?

பந்தள மன்னன் சபரிமலையில் ஐயனின் கோயில் கட்டுவதற்குத் துவங்கிய நாள் கார்த்திகை மாதம் முதல் தேதியாகும். கோயில் திருப்பணி முடிந்து பரசுராமரால் *செய்யப்பட்ட விக்கிரகத்தைத் தன் தரங்களால் அவரே பிரதிஷ்டை செய்த தினம் மார்கழி* மாதம் கடைசி நாள். இவ்விரு தேதிகளுக்கும் உள்ளிட்ட நாட்களையே விரதம் அனுஷ்டிக்க உகந்த நாட்களாகப் பெரியோர்கள் வகுத்துள்ளனர். மண்டல காலம் விரதமிருப்பின் மூலம் நம் தேகத்தினுள்ளிருக்கும் நாடிகளும் மனமும் சக்தியடைய வேண்டும் என்பதுதான்.

எப்போது மாலை போட்டுக் கொண்டாலும் 48 நாட்கள் அது வழுவாமல் நடந்துகொள்வது மிக மிக முக்கியமானது. ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு, யாத்திரை ஒரு புரியாத புதிர்.

மற்றைய தெய்வங்கள் முடி இறக்கச் செய்வதோடு எப்பொழுதும் எப்படி வேண்டுமானாலும் குடும்பத்தோடு கணவன் மனைவியாக வழிபாடு செய்ய அனுமதி கொடுக்கின்றனர். ஆனால் சபரியாத்திரை சபரி விரதம் சபரி மலை தரிசனம் எல்லாமே புரியாத புதிர். குடும்பதை மறந்து துறவிக்கோலம் பூண்டு பிரமச்சாரியாய், முடி வளர்த்து குருஸ்வாமி துணை கொண்டு குறிப்பிட்ட சில நாட்களிலேயே இருமுடி சுமந்து 18 படியேறித் தரிசனம் செய்யுமாறு அருளாணை வித்திதுள்ளார். மற்றைய தேவி கோயில்களெல்லாம் எல்லாம் நட்களிலும் வழிபாட்டிற்குத் திறந்திருக்க ஆதிசற்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிறுவாச்சூர் ஸ்ரீ மதுரகாளியோ திங்கள், வெள்ளி மட்டுமே வழிபாட்டினை ஏற்றுக்கொண்டு பக்தர்களுக்கு ஏற்று அது வழுவாமல் நடப்பதும். 48 நாட்கள் விரதமிருந்து, தினமும் சரணகோஷமிட்டு ஐயனைப் பெரிய பாதையில் சென்று இருமுடி சுமந்து 18 படிகள் ஏறித் தரிசனம் செய்வது தான் உண்மையான பரிபூரண தரிசனம். மற்றைவை பிக்னிக் போவது போலத்தான். அதுவும் குறைவான நாட்கள் விரதமிருந்து அவசரம் அவசரமாகத் தரிசனம் செய்து திரும்பி நாமும் ஐயனைத் தரிசனம் செய்தோம் என்று திருப்பதிப்படுத்திக் கொள்வது பக்குவப் பூரணமாகப் பக்குவமாகாத உணவினை உண்ணுவது போலத்தான் பிஞ்சில் பழுத்தது போலத்தான் வெம்பி உதிர்ந்து விட வேண்டிய நிலைதான்.

சில வழிமுறைகள், கோட்பாடுகளை நம் முன்னோர்கள் குருஸ்வாமிகள் ஸ்ரீ ஐயப்பன் யாத்திரையைப் பொறுத்து அவர்களது புனிதமான அனுபவங்களால் வகுத்துத் தந்துள்ளனர் அதன்படிதான் சிறிதும் வழுவாமல் நாம் நடக்கவேண்டும். பெரிய ஜவுளின் கடை வாசலில் அழகான ஆளுயரப் பெண் பொம்மையை மிகவும் சிறப்பாக அலங்கரித்து பட்டுப்புடவை கட்டி, நகைகளை அணிவித்துச் சிரித்த முகத்துடன் காட்சிப் பொருளாக நிறுத்தி வைத்துள்ளனர். அந்த அழகான பொம்மையைத் திருமணம் செய்து கொள்முடியுமா? முடியாதே, ஜீவன் இல்லையே, உயிரற்ற ஜடப்பொருளாயிற்றே. அதுபோலத்தாக் விரத பங்கத்தோடு ஸ்ரீ ஐயப்பன் தரிசனம் செய்வதும் அது ஒப்புக்குச் சொல்லிக்கொள்ளலாமே தவிர ஸ்ரீ ஐயன் தரிசனம் செய்த கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. புனிதமான தெய்வீகச் சிரிப்போடு சபரீசனும் இந்தன் காட்சிகளைக் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரஜோதியின் தத்துவம்

இறைவனுக்கென்று உருவ வழிபாடு பிற்காலத்தில் தான் இருக்க முடியும் ஏனெனில் மனிதன் தோன்றிய காலத்தில் உலோகங்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை. கற்களில் துவங்கிய சிற்பக்கலை படிப்படியாக வளர்ந்து, பிற்காலத்தில் ஐம்பொன் வரை சென்றது.

எனவே மனிதன் துவக்க காலத்தில் ஒளியையே தெய்வமாக வழிபட்டுள்ளான். சூரிய வழிபாடு முதலில் தோன்றியது. நம்மை மீறிய ஒரு சக்தி இருக்கிறது என மனிதன் பகுத்தறிந்த போது ஜோதி வடிவாக இறைவனைக் கண்டான். அதனால் தான் வள்ளலார் இறைவனை அருட்பெருஞ்ஜோதி என அழைத்தார்.

இறைவன் திருவண்ணாமலையில் ஜோதியாய் காட்சி அளிக்கிறார். கார்த்திகை அன்று ஏற்றப்படும் தீபம் ஆண்டு முழுவதும் எரிவது அதனால் தான் இதேபோல் தான் ஐயப்பன் சுவாமியும் ஜோதி வாடிவாக காட்சி அளிப்பது. பொன்னம்பல மேட்டில் மகரசாந்தியன்று அவர் ஆண்டுதோறும். இந்த கலிகாலத்திலும் ஜோதி வாடிவாய் காட்சி அளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலையில் கண் விழித்தவுடன் பார்க்க வேண்டியது

- அருகம்புல்
- நெய்
- தயிர்
- பூர்ணகும்பம்
- கன்றுடன் கூடிய பசு
- காளைமாடு
- தங்கம்
- மண்
- பசுவின் கோமியம்
- அக்னி
- சந்தனம்
- அரசமரம்
- மிருதங்கம்
- கண்ணாடி
- ரத்தினங்கள்
- குரு
- சூரியன்
- வெண் கடுகு
- காராம் பசு
- சமுத்திரம்
- விஷ்னுக்ராந்தி செடி
- மஞ்சள்
- உப்பு
- சீரகம்
- பழங்கள்
- கருப்பு

## ஐயப்பன் 18படி தெய்வங்கள்

- விநாயகர்
- சிவன்
- பார்வதி
- முருகன்
- பிரம்மா
- விஷ்னு
- ரங்கநாதன்
- காளி
- எமன்
- சூரியன்
- சந்திரன்
- செவ்வாய்
- புதன்
- குரு
- சுக்கிரன்
- சனி
- ராகு
- கேது

## பூஜையில் சிறந்த தலங்கள்

காலை பூஜை - ராமேஸ்வரம்

மதிய பூஜை - திருவானைக்கால்

அந்தி பூஜை - திருவாரூர்

இரவு பூஜை - மதுரை

அர்த்தஜாம பூஜை - சிதம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் உடைப்பதன் தத்துவம்

ஆன்மாக்களுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று நீங்கினால் ஆனந்தம் விளைகின்றன. தேங்காய்க்கு மேலே உள்ள பச்சை மட்டை மாயை ஆகும். நாரை உரித்து எடுத்து சந்நிதியில் உடைக்கும் பொழுது ஆணவம் என்ற ஓடு உடைந்து வெண்மையான பருப்பு வெளிப்படுகிறது. எனவே இறைவனிடத்தில் போய் சேர ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் நீக்க வேண்டும் என்று நமக்கு விளங்குகிறது.

# தெய்வ வழிபாட்டில் தேங்காய்

ஸ்ரீ ஐயப்பன் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் ஏன் சுத்தமான நெய்யை தேங்காயில் அடைத்துக்கொண்டு செல்கிறார்கள்.

ஒரு தடவை தென்னைமரம் இறைவனிடம் இறைவா தங்களுக்குப் படைக்கப்படும் பூஜைப் பொருளாகவும், மற்றவர்களுக்குப் பயன்படக்கூடிய பொருளாகவும் இருக்க வரம் தரவேண்டும. என்று வேண்யடிது இறைவனும் அவ்வாறே வரம் அளித்தார் தென்னை மரமும் பூஜைக்குரிய தேங்காய்களைக் கொடுத்தது.

புனிதத்தன்மையுடைய தேங்காயில் மூன்று கண்கள் உள்ளன. அந்த மூன்று கண்கள் மாதா, பிதா, குரு, ஆகியோரைக் குறிக்கிறது. மேற்கூறிய மூவரில் இருவர் கடினமானவர் தாய் எப்பொழுதும் மென்மையானவள். தாயாகிய முதற்கண்ணில் கைவைத்து அழுத்திப்பார்த்தால் அதன் மென்மை தெரியும்.

தாயாகிய முதற்கண்ணின் வழியாக பக்தர்களின் பரிசுத்தமான வெள்ளை உள்ளத்திற்கு கோமாதாவின் நெய்யை அடைத்து கன்னிமூல கணபதியின் தம்பியான ஸ்ரீ ஐயப்பனுக்கு அவரின் தந்தையின் முக்கண் அம்சமுள்ள தேங்காயை காணிக்கையானச் செலுத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை அணித்த ஐயப்ப இல்லங்களில் நமது பெண்களின் கடமைகள்

வழங்கம் போல் கார்த்திகை மாதம் நம்மை நெருங்கிவிட்டது. கடந்த பல மாதங்காளாக ஐயனை மறந்தவர்கள் கூடக் காரத்திகை என்றதும் புத்துயிர் பெற்றுவிடுவார்கள். தங்கள் வீட்டு ஐயப்பமார்கள் சபரிமலை நினைவுபடுத்தியும் வீடு சுத்தம் செய்து ஐயப்பமார்களுக்குத் தேவையான எல்லா ஒத்துழைப்புகளும் முன்னரே செய்ய ஆரம்பிப்பது நமது வீட்டுப் பெண்கள் தான். தங்கள் வீட்டிலுள்ள பெண்கள் பரிபூரண ஒத்துழைப்பு இல்லாமல் எந்த ஐயப்பனும் நிம்மதியாகச் சபரிமலைக்குச் சென்று வர இயலாது. மொத்தத்தில் ஐயப்பமார்களுக்கு ஐயன் தரிசனம் கிடைத்தாலும் அதன் பலன் முதலில் தங்கள் வீடுகளிலிருக்கக்கூடிய பெண்களையே சாரும் என்பதில் ஐயமில்லை. இப்படி பலனடைபவர்கள் உண்மையிலே நமது வீட்டுப் பெண்களே ஆவார்கள்.

எந்தவிதமான சஞ்சலமில்லாமல் ஒரே மனதுடன் தங்கள் துயரங்களை ஒப்புவித்து வணாங்கக்கூடிய ஒரே இந்துக் கோயில் ஸ்ரீ ஐயப்பன் கோவில்தான் என்பதில் சந்தேகமில்லை நமது பெண்கள் விரதம் இருந்து மாலைபோட்டுப் சபரிமலைக்குப் போக வேண்டியதில்லை. போகாமலே அதன் பலனை அடைந்துவிடலாம். சுவாமிமார்கள் தங்களின் விரத மகிமையால் நாம் நினைத்த காரியங்கள் சித்தியாவதுடன் ஐயப்பனின் கிருபாகடாக்ஷமும் பெருமைகளும் ஒவ்வொரு ஆண்டும் வித்தியாசமான முன்னேற்றம் ஏற்படும் என்பதில் உன்னிப்பாக பார்த்தால் நன்றாக புரியும் இதையொல்லாம் நினைக்காமல் பெண்கள் மாலை அணிந்து சபரிமலைக்கு வருவதினால் பல இன்னல்களுக்கு ஆளாவதுடன் ஐயனிக் விரதத்தின் மகிமையை நிலைவேற்ற இயலாமல் போய்விடுகிறது. ஐயப்பன் ஆலயம் பல சட்டதிட்டாங்களுக்கு உட்பட்டுச் சபரிமலை பிரயாணம் செய்ய வேண்டும் என்பதை மறந்துவிடாதீகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்தாவின் ஆறு அவதாரங்கள்

சாஸ்தாவின் ஆறு அவதாரங்கள் ஸ்ரீ தர்ம சாஸ்தாவினுடைய அற்புத சரித்திரங்களில் பந்தளராஜாவின் கதைதான் தற்போது பிரபலமாயிருந்து வருகிறது. பக்தியில் திளைக்கம் ஐயப்பமார்கள் நல்வழிக்குக் கொண்டு செல்ல இது ஒன்றே போதுமானது. ஆனாலும் சாஸ்தா ஆராதனையில் தத்துவமும் தெரிந்து இருப்பது நல்லதுதான். யோகிகள் சாஸ்தாவை வழிபட்டு இருக்கிறார்கள். யோக சாஸ்திரத்தில் குண்டலினி சக்தியை எழுப்பி ஆறு ஆதாரங்கள் மூலமாக மேலே சென்று சகஸ்ரதளத்தில் அதை இருத்திப் பிரம்மத்தோடு சாஸ்திர ரீதியில் விளக்கம் சொல்லி இருக்கிறார்கள்.

01. சொரி முத்தையனார் கோவில்- மூலாதாரம்

02. அச்சங்கோவில் - சுவாதிஷ்டானம்

03. ஆரியங்காவு - மணிபூரகம்

04. குளத்துப்புழை - அநாகதம்

05. பந்தளம்- விசுத்தி

06. சபரிகிரி- ஆக்ஞா

என்று ஆறு இடங்களில் சாஸ்தாவை யோக சாஸ்திரத்தையொட்டி பிரதிஷ்டை செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. காந்தமலை ஜோதிதான் ஜோதி சொரூபமாக ஸஹஸ்த்ரளம். இந்த ஆறு ஸ்தனங்களுக்கும் சென்று ஐயப்பனைத் தரிசிக்க வேண்டும் என்ற கொள்கையும் சில ஐயப்பமார்களிடையே இருந்து வருகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவன் பூண்ட ஐயப்பனுக்கு ஆபரணம் பூணுவது ஏன்?

சபரிமலையில் துறவு பூண்ட யோக நிலையில் ஐயப்பன் எழுந்தருளியிருக்கிறார் அப்படி இருந்தும் மகர விளக்கின் போது பந்தன மகாராசாவின் அரண்மனையிலிருந்து ஆபரணங்கள் வருவதும் அதை அணிந்து அவர் காட்சி தருவதும் சிறப்பு பூஜை நிகழ்ச்சிகளாகும். துறவியான சுவாமி ஆபரணங்கள் பூண்டு காட்சி தருவதேன்? அதற்கும் ஒரு அபூர்வக் காரணம் உண்டு.

ஐயப்பன் தன் அவதார நோக்கத்தின் நிமித்தம் பந்தள நாட்டை விட்டுச் சபரிமலைக்குப் புறப்படும் போது எல்லோரிடமும் தனித்தனியாக விடை பெற்றுக்கொண்டு வந்தார் அவர்களுக்குள் பந்தள நாட்டில் நமக்கு குருவாக இருந்த குருவும் ஒருவர். அந்த குருவிடம் சுவாமி உங்களுக்கு நான் குருதட்சணையாக என்ன தரவேண்டும் என்று கேட்டார் ஐயப்பன்.

குரு நெகிழ்ந்து போய் பெருமாளே எனக்கு இப்பிறவியில் மாணாக்கர் என்று கூறும் போதே எனக்கு குரு தட்சணை என்றார். அவருடைய மனைவியோ ஊமையாகவும் குருடனாகவுமிருந்த தங்கள் குழந்தையைக் குணப்பத்தித் தர வேண்டும் என்று வேண்டினாள்.

குருபத்தினியின் கோரிக்கைப்படி அக்குழந்தை பிணி நீங்கச் செய்தார். அப்பொழுது தம்முன் நிற்பது தெய்வம் என்ற உணர்வைக் கடந்து. நெகிழ்ந்து ஐயனே நீ தங்கமும் ரத்தினமும் ஜொலிக்க மகாராஜனாக இருக்க வேண்டும் என்று ஆசீர்வதித்துவிட்டார். குரு எல்லாவற்றையும் கடந்த சுவாமிக்கு ஏன் சுவர்ண ரத்தின ஆபரணங்கள் என்ற உணர்வு அந்த குருவுக்கு அப்போது தோன்றவில்லை.


எனினும் குருவின் ஆசிதானே அது. பொய்த்துவிடக் கூடாதே அதனால் ஆண்டுக்கு ஒரு முறை மகர விளக்கு விழாவின் போது ( தை மாதம் ஒன்றாம் திகதி முதல் தை மாதம் 4ம் திகதி வரை) சுவாமி பந்தளராஜன் பரம்பரையினர் கொண்டு வரும் ஆயிரம் சவரனுக்கு மேற்பட்ட தங்கரத்தின ஆபரணங்கள் அணிந்து காட்சி தருகின்றார் ஸ்ரீ ஐயப்பன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச சாஸ்தா கோவில்கள்

சபரிமலை தவிர அச்சன் கோவில், ஆரியங்காவு, குளத்துப்புழை, எரிமேலி, பந்தளம், வலியங்கோவில் ஆகியவை பஞ்ச சாஸ்தா கோவில்கள் என்று போற்றப்படுகின்றன இங்குள்ள ஐந்து கோவில்களும் மகா விஸ்னுவின் அவதாரமான ஸ்ரீ பரசுராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை.



அச்சன் கோவில்



நுழைவுவாயில்




ஸ்ரீ கருப்பசுவாமி கோவில்


இங்கே தர்மசாஸ்தா பூர்ணாபுஷ்கலா தேவியருடன் தம்பதி சமேதராக காட்சி தருகிறார். அவர் அரசன், ஆண்டவன், மருத்துவன் என்று போற்றப்படுகிறார். அச்சன்கோவில் அரசே என்ற ஐயப்ப பக்தர்களின் முழக்கம் பிரசித்தமானது. இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் இந்த கோயிலுக்குப் பெண்கள் அதிக அளவில் வந்து தரிசனம் செய்கிறார்கள். கோயிலில் உள்ள கிணற்று நீர் மருத்துவ தன்மை கொண்டதாகக் கருதப்படுகிறது. சற்று அருகாமையில் காவல் தெய்வம் கருப்பசுவாமிக்கு தனிக்கோயில் உள்ளது. இது புனலூரிலிருந்து 40 கிலோ மீட்டர், செங்கோட்டையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரியங்காவு கோவில் வளாகம்




சுவாமி ஐயப்பன் சன்னிதி

இந்த கோவில் கேரள மற்றும் தமிழ்நாட்டு கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறது. ஐயப்பன் இங்கே குமாரனாக காட்சி அளிக்கிறார். திருஆரியன் என்ற பெயரில் அருள்பாலிப்பதால் இந்த இடம் ஆரியங்காவு என்று பெயர் பெற்றது. சௌராஷ்டிர பெண்ணான புஷ்கலாதேவி ஐயப்பன் திருக்கல்யாண வைபவம் ஆண்டு தோறும் பதினோரு நாட்கள் இங்கே சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் ஐயப்பன் வெவ்வேறு அலங்காரத்தில் காட்சியளிப்பார். ஆரியங்காவு தேவஸ்தான சௌராஷ்டிர மகாஜன சங்கம் என்ற அமைப்பு மதுரையில் உள்ளது.


திருவிதாங்கூர் மன்னரும் தேவஸ்வம் போர்டும் மதுரையில் உள்ள சௌராஷ்டிரா சமூகத்தினரை திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பார்கள். இவர்கள் சம்பந்திமுறையில் திருமணத்திற்கான சகல பொருட்களையும் தங்களுடன் எடுத்துக் கொண்டு ஆரியங்காவு செல்வர். இது கொல்லத்திலிருந்து 70 கிலோ மீட்டர், செங்கோட்டையிலிருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பாலசாஸ்தா கோவில் / குளத்துப்புழை



குளத்துப்புழை ஆற்றில் மீன்கள் கூட்டம்



குளத்துப்புழை ஆற்றில் யானை நீராடல்

# குளத்துப்புழை

கொல்லம் மாவட்டம் தென்மலைக்கு அருகே அமைந்துள்ளது குளத்துப்புழை ஐயப்பன் கோவில் மண்டலமகரவிளக்குக் காலத்தில் லட்சக்கணக்கில் ஐயப்ப பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்கிறார்கள். அடர்ந்த காட்டின் நடுவே, கல்லட நதியின் ஒரு பிரிவான குளத்துப்புழை நதிக்கரையில் அமைந்துள்ளது இந்தக் கோயில் குழந்தை உருவில் உள்ள ஐயப்பன் இங்கு மணிகண்டன் என்று அழைக்கப்படுகிறான். இவ்வாயலயத்தில் சிவனுக்கும், சாஸ்தாவுக்கும், மஹா விஷ்ணுவிற்கும் சன்னிதிகள் உள்ளன.

இங்குள்ள மஹா விஷ்ணுவின் சிலைவடிவம் அற்புதமானது. சிவன் லிங்க வடிவில் இருக்கிறார். சுற்றுப் பிரகாரத்தில் விநாயகருக்கும், தேவிக்கும் கோவில்கள் உள்ளன. இவ்வாலயத்தின் அருகே ஓடும் நதியில் உள்ள மிகப்பெரிய மீன்களுக்கு உணவளிப்பது கண்களுக்கு விருந்தாகும். "குளத்துப்புழை பாலனே" என்று ஐயப்ப பக்தர்கள் ஒலிக்கும் கோஷம் பிரசித்தம். திருவனந்தபுரத்திலிருந்து வடகிழக்காக 60 கிலோமீட்டர். கொல்லத்தில் இருந்து 64 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது குளத்துப்புழை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பந்தளம்

பம்பையில் கண்டெடுக்கப்பட்ட ஐயப்பன் ஓடி விளையாடிய இடம் பந்தளம். இது பத்தனம்திட்டை மாவட்டத்தில் அச்சன்கோவிலாறு கரையில் உள்ளது. குழந்தை ஐயப்பன் வாழுந்த பந்தளம் அரண்மனை, அரசு குடும்பதினர் வணங்கிய தேவாரப்புரை, ஆற்றங்கரையில் உள்ள பந்தளம் வலியக்கோவில் ஆகியவை ஐயப்பப் பக்தர்கள் அவசியம் காணவேண்டியவை.


இன்றும் பந்தள மகாராஜா வம்சத்தை சேர்ந்த ஒருவர் இங்கு வரும் ஐயப்ப பக்தர்களுக்கு விபூதி வழங்குகிறார். இங்குள்ள முக்கிய உற்வசம் திருவாபரணம் எழுநல்லல். ஐயப்பனிக் திருவாபரணங்களை தலையில் சுமந்து கொண்டு கால்நடையாக மூன்று நாட்கள் காட்டிலும் மேட்டிலும் நடந்து நதியைக் கடந்து, ஐயப்பனின் சன்னிதியை அடைகிறார்கள்.

குழந்தை இல்லாத பந்தளராஜா ராஜசேகரன் பம்பை நதிக்கரையில் கண்டெடுத்த ஐயப்பனை கடவுள் தந்த பரிசு எனக் கருதி தனக்குப் பின் சிம்மாசனம் ஏறும் வாரிசாகக் வளர்ந்து வந்தார். ஐயப்பனும் நாளொருமேனியும் பொழுமொரு வண்ணமுமாக அறிவும் ஆற்றலும் பெற்று வளர்ந்து வந்தான். அச்சன்கோலிலாறு கரையில் அமைந்திருக்கும் ஆலயத்திலுள்ள தர்ம சாஸ்தா பந்தளம் ராஜாவின் தர்ம தேவனாகத் திகழ்கிறார். இந்த கோவிலின் அருகாமையில் உள்ள சிராம்பிக்கல் மாளிகையிலிருந்து பக்தர்கள் புடைசூழ, கோஷங்கள் முழுங்க திருவாபரணப் பெட்டி சபரிமலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. மகர விளக்கோடு சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சி இது. பந்தளம் செங்கனூர் இரயில் நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எருமேலி ஸ்ரீ தர்மசாஸ்தா கோவில்



எருமேலி கோவில் நுழைவாயில்

பெருவழிப்பாதை மற்றும் சலாக்காயம் வழியாக யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்கள் எல்லோரும் ஒன்று கூடும் இடம் எருமேலி. இங்கே தர்மசாஸ்தா வில்லும் அம்பும் ஏந்தி காட்சியளிக்கிறார். எருமேலியில் கொச்சம்பலம், சாஸ்தா கோவில் மற்றும் சுற்றியுள்ள இடங்களிலிருந்து ஒலிக்கும் சங்கின் ஓசையும், சரண கோஷமும் வாவர் மசூதியிலிருந்து எழும் தொழுகையின் அழைப்பயையும் ஒருங்கே கேட்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேட்டைத் துள்ளல்

பேட்டைத் துள்ளல் என்பது பக்தர்கள் கூட்டமாகத் துள்ளி ஆடும் ஓர் ஆவேச ஆட்டமாகும். இசைக் கருவிகளின் முழக்கத்தின் பின்னணியில் ஐயப்ப பக்தர்கள் பேட்டைத் துள்ளலில் கலந்து கொள்வார்கள். முகத்திலும் உடலிலும் வணணப் பொடிகளைப் பூசிக்கொள்வார்கள். இவ்வாறு பூசிக்கொள்வதன் மூலம் யாத்திரையைத் தொடங்குமுன் அவர்கள் தான் எனும் ஆணவத்தை ஒழித்துக் கொள்கிறார்கள் என்று கருதப்படுகிறது.

ஒவ்வொரு கன்னி ஐயப்பனும் கன்னி மாளிகப்புறமும் பேட்டைத் துள்ளல் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும். இரண்டாவது முறையாக மலைக்குச் செல்பவர்கள் கன்னி ஐயப்பன்மார்களுக்கும் கன்னிமாளிகைப்புறங்களுக்கும் பேட்டைத் துள்ளலுக்கான அலங்காரங்களைச் செய்ய வேண்டும். பேட்டைத் துள்ளல் ஏன் நடைபெறுகிறது என்பற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

ஐயப்பனை அழிக்க வந்த அசுரன் எருமை வடிவெடுத்து வந்திருந்தான் அதன் காரணமாகவே அந்த இடத்துக்கு எருமேலி என்ற பெயர் வந்தது. எருமை வடிவில் வந்த அசுரனை ஐயப்பன் அழித்துவிட்ட செய்தி நாடெங்கும் பரவியது. அதைக் கொண்டாடுவதற்காகவே மக்கள் பேட்டைத் துள்ளல் ஆட்டத்தை ஆடினர்.

உதயணன் என்ற கொள்ளைக்காரன் அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் தொல்லைக் கொடுத்து வந்தான். அவனை அடக்கச் சென்ற ஐயப்பனுக்கும் அவனது படைவீரர்களுக்கும் துணையாக அம்பலப்புழை மற்றும் ஆலங்காட்டிலிருந்த மக்கள் சென்றனர்.

இதற்காகவே இவ்விரு ஊர் மக்களுக்கும் பேட்டைத் துள்ளலின் போது தனிமரியாதை வழங்கப்படுகிறது. ஐயப்பன்மார் இருமுடிக்கட்டுகளுடன் தம்மை மறந்து ஆடுவது பிரமிப்பூட்டுவதாக இருக்கும்.

அம்பலப்புழை ஆலங்காடு ஐயப்பன்மார் பேட்டைத் துள்ளலை மிக ஆரவாரமாக நிகழ்த்துவார்கள். இதற்காக அவர்கள் தனிப் பயிற்சி பெற்றிருப்பார்கள். இரு ஊர்காரர்களும் தங்கள் திறமையைக் காட்ட ஆவேசமாக ஆடுவார்கள். இந்தப் போட்டி நட்புறவுடன்தான் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. பேட்டைத் துள்ளலின்போது பக்தர்கள் தொடர்ந்து ஐயப்பத் திந்தக்கத் தோம், சுவாமி திந்தக்கம் தோம், என்று உரக்கப் பாடி ஆடிக்கொண்டிருப்பார்கள். எருமேலியில் உள்ள கொச்சம்பலத்திலிருந்து பேட்டைத்துள்ளல் தொடங்கும்.

அம்பலப்புழைக் குழுவினரின் பேட்டைத் துள்ளலில் அலங்கரிக்கப்பட்ட மூன்று யானைகள் தர்மசாஸ்தாவின் உருவத்தைத் தாங்கி வர துள்ளல் ஆடுவோர் ஐயப்பனின் நண்பரான வாவர் மசூதிக்கு செல்வர். அங்கு அவர்களுக்கு மரியாதை வரவேற்பு வழங்கப்படும் பிரதிநிதி ஒருவர் இக்குழுவினரோடு வலியம்பலத்துக்குச் செல்வார்.

ஆலங்காடு இரு குழுவினரின் பேட்டைத் துள்ளல் கொச்சம்பலத்திலிருந்து நேராக வலியம்பலத்தை அடையும் பொழுது அவர்களுக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப்படும். கோவிலை வலம் வந்த பின் பேட்டைத் துள்ளல் நிகழச்சி நிறைவு பெறும். அதன்பின் அம்பலப்புழை ஆலங்காடு ஐயப்பன்மார் சமூக விருந்தில் கலந்து கொள்வார்கள். எருமேலி இந்து முஸ்லீம் ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தின் அடையாளமாகத் திகழ்கிறது எரிமேலி கோட்டயத்திலிருந்து 38 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் நல்கும் வனயாத்திரை

## எருமேலி

தேசத்தின் நான்கு மூலைகளிலிருந்தும் புறப்படும் ஐயப்ப பக்தர்கள் எருமேலி என்ற இடத்தில் கூடுவார்கள். பக்தர்களின் கணக்கற்ற வருகை காரணமாய் எருமேலி என்று ஜனநெரிசல் நிறைந்த இடமாக மாறியுள்ளது. இங்கு ஒரு சாஸ்தா ஆலயம் உண்டு. ஆலயத்திலிருந்து சுமார் 1/2 மையில் வடக்கிழக்கில் எருமேலி பேட்டைக் களமாகும். இங்கு ஐயன் ஐயப்பனின் அருமை நண்பாரான வாவரின் ஆலயமும் பேட்டை சாஸ்தாவின் ப்ரதிஷ்டையுள்ள சிறுகோயிலும் உண்டு.

இந்த ஆலயங்களைச் சுற்றி அநேகம் முஸ்லீம் அன்பர் குடியிருக்கிறார்கள். மார்கழி மாதத்தில் வாவர் ஆலயத்தில் கொடியேற்றப்படும்.

எருமேலி பேட்டை ஆடுதல் சபரிமலை யாத்திரையில் முக்கியமான அம்சமாகும். இங்கு இந்துக்களும், முஸ்லீம்களும் ஒரு தாய் மக்கள் போல் சகோதர நேச பாசத்துடன் பழகுவதைக் காணலாம். ஜனசந்தடி நிரம்பப்பெற்ற எருமேலி கடைவீதியின் நடுமையத்தில் வாவர் தேவாலயம் அமையப் பெற்றுள்ளது. ஹரிஹர புத்திரரான ஸ்ரீ தர்ம சாஸ்தா வேடனைப்போல் வில்லும் அம்பும் தரித்த நிலையில் நிற்கும் தோற்றத்தில் இங்கு ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் இங்கு தாவளம் போடாமல் செல்லமாட்டார்கள்.

எருமேலி, பெருநாடு வண்டிப் பெரியாறு என்ற மூன்று ஆலய சாஸ்தா ஆலயங்களுக்கிடையில் வனங்கள் ஐயப்பனின் ( பூங்காவனம், நந்தன வனமென்றழைக்கப்படும். பேட்டையில் முகமதீயர்களும் பங்குபெறுகிறார்கள். ஐயப்ப பக்தர்கள் எருமேலியை அடைந்து கட்டு இறங்கியவுடன் சிலர சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு பேட்டையாட கிளம்புவர் மற்றும் சிலர் உடனே பேட்டையாட தயாராகி விடுவார்கள்.

## பேட்டைக்களமும் துள்ளலும்

எருமேலி கடைவீதியில் மலையாத்திரையில் ஆகாரத்திற்கு தேவையான காய்கறிகள், சமையல் செய்ய தேவையான பாத்திரங்கள், பாய் போன்றவைகளை வாங்கி ஒரு பெட்ஷீட்டில் கட்டி நடுவில் கம்பு கொடுத்து இருவர் மாற்றி மாற்றி சுமந்தவண்ணம் செல்வார்கள்.

பேட்டை துள்ளலில் முக்கியமாய் கன்னி ஐயப்பன்மார் (அதாவது முதல் மலை ஏறுபவர் கலந்து கொண்டே தீர வேண்டும். ஐயப்பன்மார் முக்கியமாய் சிறியவர் பெரியவர் என்ற பாகுபாடின்றி கருப்பு, சிகப்பு, நீலம், பச்சை போன்ற கலர் பொடிகளை உடம்பில் பூசிக்கொண்டு காட்டாளனைப் போல் வேஷமிட்டு இலைகளையும், தழைகளையும் உடலில் சுற்றிக்கொண்டு கையில் சரக்கோலுடன் ஆரவாரமாய் சாமி திந்தக்கதோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்ப திந்தக்கதோம் என்று கூவிக்கொண்டு வாவரின் ஆலயத்தை வலம் வந்து பேட்டையில் சாஸ்தாவின் ஆலயத்தை அடைவார்கள். சண்டமேளத்துடன் ஆர்ப்பாட்டாமாய் மேடை துள்ளும் ஐயப்பன் மார்களுடன் கலந்து துள்ள முடியாத நிலையிலுள்ள வயோதிகர்கள் துள்ள முடியாவிடினும் அதற்கு உதவியாகவாவது இருத்தல் வேண்டும். தளலயத்துடன் கூடிய அந்த ஆனந்த நடனம் எப்பேர்பட்டவர்களின் மனதையும் களிப்படையச் செய்வதோடுல்லாமல் சிலரை ஆவேசம் கொள்ளவும் செய்யும், வேட்டை கம்பும் கொண்டு ஆனந்த நடனம் செய்து கொண்டே எருமேலி சாஸ்தா கோயிலை மும்முறை வலம் வநது நமஸ்கரித்து கற்பூர தீபாராதனை செய்து பேட்டை துள்ளலை முடிக்க வேண்டும்.

பேட்டை துள்ளல் முடிந்தால் குளித்து சுத்தமாகமல் விரியில் செல்லக்கூடாது பேட்டை ஆடுவதற்கும் துள்ளுவதற்கும் காரணங்களுண்டு, பந்தளத்தரசனின் ஆனைப்படி தாயின் தலைநோவு தீர்க்க புலிப்பால் கொண்டுவரக் கானகம் புறப்பட்ட ஐயப்பன் வேட்டைக் காரரகளுடன் சேர்ந்தது வேட்டையாடியத்தையெட்டி அதை உனர்வதுபோல் இன்றும் பேட்டைத்துள்ளல் சபரிமலை யாத்திரையில் குறிப்பிடதக்க அங்கமாகத் திகழ்கின்றது.

பேட்டை துள்ளி, குளித்து பரிசுத்தமான பிறகு எருமேலி கோயிலில் தரிசனம் காணிக்கை விடல் தேங்காய் உடைத்தல் போன்ற வழிபாடுகள் நடத்த வேண்டும். வாவருடைய கோயிலும் தம்முடைய சக்திக்கொப்ப வழிபாடு செய்தல் வேண்டும். இங்கிருந்து அடர்ந்த காட்டில் நம் யாத்திரை துவங்குகின்றது. பேட்டை துள்ளல் முடிந்தவுடன் மலையாத்திரை செல்ல ஆயத்தமாய் தலையில் சுமந்து இருமுடியுடன் சாமியே-ஐயப்பா என்ற தாரக நாமஜபத்துடனும் ஐயனின் சபரிமலை கோயிலை நோக்கி கிழக்காக நமது யாத்திரையை துவக்கவேண்டும்.

## பேரூர் தோடு

இது மிகவும் புராதனமான முக்கதியத்துவம் வாய்ந்த வாய்க்காலாகும். கிழக்கு முகமாக நாம் துவங்கிய வனயாத்திரையில் இளைப்பாற சிறந்த இடம் இந்த பேரூர்தோடாகும். எருமேலியிலிருந்து இரண்டு மைல் தூரமேயுள்ள இந்த தோடு கானகத்தையும், கிராமத்தையும் பிரிக்கும் எல்லையாக அமைந்துள்ளது. வனயாத்திரையில் ஸ்ரீ தர்மசாஸ்தா இந்த தோடில் குளித்து இளைப்பாறியதாக கூறப்படுகிறது. யாத்திரையை மேற்கொண்டுள்ள ஐயப்பன்மார் இத்தோடில் குளித்து மலர், அரிசிப் பொரி இவற்றை இந்த வாய்க்காலில் உள்ள மீன்களுக்கு தூவி தமது பக்தியை பறைசாற்றுவர். இந்த இடத்திலிருந்து அரசாங்கத்தின் விலை உயர்ந்த தேக்கு தோட்டம் ஆரம்பமாகும். பேரூர்தோடை அடையும் இடம் வரை உள்ள ஸ்தலத்திற்கு கோட்டைப் படி என்று பெயர்.

## கோட்டைப்படி

கோட்டைப்படியைக் கடந்தால் அங்கிருந்து துவங்கும் இடம் ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் பூங்காவென மென்றழைக்கப்படும். ஆகையால் அங்கு இரண்டு இலைகளைப் பறித்து வழிபாடு செய்த பிறகுதான் கடந்து செல்ல வேண்டும். கோட்டைப்படி என்பது கோஷ்டப்படி என்ற சொல்லிருந்து மருவியிருக்க வேண்டும். வாவரின் கோஷ்டஸ்தானம் என்ற அர்த்தத்தில் இந்த கோட்டைப்படி என்ற சொல் தோன்றியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளை கட்டி

கோட்டைப்படி கடந்தால் அடுத்த முக்கிய இடம் காளை கட்டியாகும். எருமேலியிலிருந்து சுமார் 8 மைல் தொலைவிலுள்ளது இந்த காளை கட்டி என்ற இடம். காளை கட்டி ஒரு அழகு மிகுந்த வனப்பிரதேசமாகும். இங்கு வனவிலங்குகள் தாராளமாய் சஞ்சரிக்கும். மஹிஷியை வதம் செய்த ஐயப்பன் அவளைத் தனது காலால் மர்த்தனம் செய்யும காட்சியை காணவந்த கைலயங்கிரிவாஸன் தனது வாகனமான காளையை இந்த இடத்தில் கட்டியதால் இந்த இடத்திற்கு காளைகட்டி என்ற பெயர் ஏற்பட்டதாய் சில நூல்கள் கூறுகின்றன. மற்றும் சில நூல்களில் பந்தளத்தரசன் ராஜசேகரன், ஐயன், ஐயப்பன் தன்னை விட்டுவிலாகாதிருக்க அவருடைய காளை கட்டியதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கக் கூடுமென்றும் கூறுகின்றன. எப்படி இருப்பினும் தெய்வ வழிபாட்டுடன் புராணத் தொடர்புள்ள இடமென்பதில் ஐயமில்லை. இந்த காளை கட்டியில் நட்டுவைத்துள்ள கல்லில் கன்னி ஐயப்பன்மார்கள் விடல் தேங்காய் உடைக்கின்றனர் வெடி வழிபாடும், கற்பூரம் கொளுத்தி ஆராதனை செய்தலும் இங்குள்ள சடங்காகும்.

## அழுதாநதி ( அலஸாநதி)

காளை கட்டியில் இருந்து சுமார் ஒன்றரை மைல் கிழக்காக நடந்தால் அழுதாநதி என்ற இடத்தை அடையலாம். இந்த அழுதாநதி தொடர்ச்சியாக பாய்ந்து பம்பா நதியில் சென்று கலக்கிறது. அழுதா நதியை அடைந்தால் ஐயப்ப பக்தர்கள் ஒரு இரவு அங்கு தங்குவது வழக்கம். யாத்திரிகளுக்கு தேவையான சுகசௌகரியங்கள் இங்கு உண்டு. மனதை கவரும் இயற்கை அழகும் பளிங்கு போன்ற பாயும் நீரும். காற்றும் அங்கு செல்பவரை கவரும் ஆகையால் அங்கு செல்பவர்கள் அந்த நதிக்கரையின் இரு மருங்கிலும் குடில் அமைத்து இளைப்பாறுவார்கள்.

மாலை நேரத்து சூரிய கிரணங்கள் பட்டு உருக்கிய தங்கம் போல் பிரவிக்கும் அழுதா நதியின் தோற்றத்திலும் வான்நோக்கி உயரந்து வளர்ந்து உள்ள மரங்களின் இயற்கை அழகும் பக்தர்களின் மனதில் நிர்மலமான ஆனந்தத்தை தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நதியில் இருக்கும் பாறைகளில் மோதி அலை அலையாக வழிந்தோடும் அலசா நதியுடைய அலைகளில் ஐயப்பமார் கரையில் ஏற்றிய தீபங்களின் ஒளிபட்டு மின்னும் காட்சி மனதை கொள்ளைகொள்ளும் கதிரவன் மறைந்து இருள் சூழும் நேரம் அந்த அழுதா நதிக்கரையில் குடிலமைத்து கூடியிருக்கும் ஐயப்பன் மார்களுடைய சரணகோஷங்களும் பக்தி நிரம்பிய பஜனைப்பாடல்களும் சண்டை, மத்தளம், உடுக்கு போன்ற தாளலங்களும் அநத இடத்தை சுவர்க்கத்திற்கொற்பாக மாற்றும் என்பதில் ஐயமில்லை. மறுநாள் காலை புறப்படு முன் அழுதா நதியில் குளித்து மூழ்கும் போது நம்கையில் கிடைக்கும் சிறுகல்லை மடியில் கட்டிக்கொண்டு அதை மிகவும் கவனமாய் நம் கல்இரும்குன்று என்ற இடத்தில் போடவேண்டும் சபரிமலை யாத்திரையில் நாம் செய்யும் சிறு செயல்களுக்குக் கூட தக்க காரணங்கள் இருக்கும் மஹிஷியை ஐயப்பன் சொல்வதைக் காணவந்த முப்பது முக்கோடி தேவர்களும் வதம் முடிந்த பிறகு ப்ரம்தஹத்தி தோஷம் நீங்க அழுதா நதியில் நீராடும் சமயம், மரித்த மஹிஷியின் பூத உடல் வளர்ந்து கொண்டே வானைமுட்டச் செல்வதைக்கண்ணுற்ற தேவர்கள் அலசை ஆற்றில் இருந்தப்படியே அவரவர் கையில் கிடைத்த ( சிறியதோ, பெரியதோ) கற்களை எடுத்து அவ்வரக்கியின் பூதஉடலின் மீது இட்டுமெலும் அவ்வுடலை வளரவிடாமல் மூடியதாகவும் ஆகையால்தான். இன்றும் யாத்திரையில் அலசாந்தி அழுதா நதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவினாலும் இந்தக் கல் எடுத்து குன்றிலிடும் பழக்கம் மட்டும் மாறவேயில்லை. நதியில் நாம் கண்டெடுத்த கல்லை மிகவும் கவனமாய் நம் மடியில் கட்டிக்கொண்டு நடையை துவக்கவேண்டும்.

❋❋❋❋

## அழுதாமேடும், கல் இடும் குன்றும்

அழுதையிலிருந்து நடக்க ஆரம்பிக்கும் அய்யப்பன் மார்களுக்கு இரண்டுமைல் செங்குத்தான மலை ஏற்றம் எதிர்படும் இதைத்தான் அழுதை ஏற்றம் என்று சொல்வார்கள். இதை விட கடினமான ஏற்றம் வேறு இல்லை என்றுதான் கூறவேண்டும் பக்தர்களான வயோதிபர்களும் குழந்தைகளும் ஐயனின் கருணையினால் சிரமப்படாமல் ஏறுவது கண்கொள்ளா காட்சியாகும். ஒவ்வொருவடைய இருதய சத்தியையும், பாப சக்தியையும் அளக்கும் இடமாகும். இநத அழுதாமேடு ஐயப்ப பக்தர்கள் பயபக்தியுடன் கொணர்ந்த கல்லை அழுதாமேட்டின் முடிவில் ஒரு பக்கமாக இருக்கும் கல் இடும் குன்று என்ற இடத்தில் போட்டு வணங்க வேண்டும். அலசை ஆற்றில் இருந்து தேவர்களால் எறியப்பட்ட கற்கள் மஹிஷியின் பூதஉடலை மறைந்த இடம் என்றும், இந்த குன்றை கல் இடும் குன்று என்றழைத்து பய பத்தியுடன் வணாங்குவார்கள்.

❋❋❋❋

## இஞ்சிப்பாறை கோட்டை

சரித்திரத்தில் இந்த இடத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது . அழுதை ஏற்றத்தின் கடினம் இந்த இடத்தை அடையும் போது எதிர்படும் சிறுவாய்க்காலுடன் முடிவடைகின்றது. வாய்க்கால் என்றாலும் இங்கு தண்ணீர் கிடைப்பது மிகவும் கடினம் ஆயிலும் இதை ஒரு இளைப்பாறும் கட்டமாக பக்தர்கள் கருதுகிறார்கள் இங்கு கோட்டைப்படி சாஸ்தாவை நினைத்து சில பூஜைகள் நடத்துவது வழக்கம். விடல் தேங்காய் எரிவது, வெடி வெடிப்பது போன்ற சில வழிபாடுகள் நடத்துவார்கள். மலைவழியில் இந்த மாதிரி தாவளங்கள் ஏற்படுத்தி வெடி சப்தம் செய்வதால் இந்த சுற்றுப்புறத்தை, அந்த ஜனநடமாட்டமுள்ள இடத்தை வெடி சப்தத்திற்கு பயந்து வன விலங்குகள் அணுகாமல் விலகிச் செல்ல வேண்டி ஏற்பட்டதுதான் இந்த வெடி வழிபாடு என்பது ஆகையால் பக்தர்கள் அவரவர் சக்திக்கொப்ப வெடி வழிபாடு செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவளங்களையும் கோட்டைகளையும் பற்றிய விபரங்கள்!

இஞ்சிப்பார கோட்டையில் இருந்து கிழக்காக நடந்தால் கரிமலை வரும். கரிமலை உச்சியும் ஒரு இளைப்பாறச் சிறந்த தாவளமாகும். ஆக மொத்தம் ஏழு கோட்டைகளும் அவற்றில் ஏழு தாவளங்களும், சபரிமலை யாத்ரீகர்களின் இளைப்பாறும் கேந்த்ரங்களாகும். எருமேலி, கோட்டைப்படி, காளைகட்டி இஞ்சிப்பாரகோட்டை, கரிமலை சபரிபீடம், சரங்குத்தி ஆல், பதினெட்டாம்படி என்ற ஏழு கோட்டைகள் ஐயப்பனுக்குள் உண்டு. இதில் எருமேலி, அழுதாநதி, இஞ்சிப்பார கோட்டை உடும்பாரமலை, கரிமலைத்தோட்டம், கரிமலை உச்சி, பம்பையாற்றுக்கரை, சன்னிதானம், போன்ற இடங்களில் மட்டும் தாவளங்களடித்து இளைப்பாற சிறந்த இடங்களாக தேர்ந்தெடுத்து உள்ளார்கள். அதற்குள்ள சௌகர்யங்களும் அந்த இடங்களில் உண்டு.

மேற் கூறப்பட்ட கோட்டைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தேவதை உண்டு. ஆகையால்தான் ஒவ்வொரு கோட்டையை தாண்டும்போதும் கானகத்தில் நமக்கு வழித்துணை புரியும் அந்த தேவதைகளை ப்ரீதி செய்யும் வண்ணம், வெடி வழிபாடும் செய்து விடல் தேங்காய் எரித்தும், கற்பூரம் காண்பித்தும் சண்டை, மத்தளம், உடுக்கு போன்ற வாத்தியங்களை முழங்கியும், பக்த்தியுடன் பாடல்கள் பாடியும் வழிபாடு நடத்துகிறார்கள். இஞ்சிப்பார கோட்டையை கடந்து வரும் ஐயப்பன்மார்களுக்கு கரிமலை ஏற்றம் சற்று கடினம்தான். இங்கிருந்து கரிமலை உச்சிவரையுள்ள வனம் கண்ணையும் மனதையும் கவரும் விதமாய் அமைந்துள்ளது.

## பல வருடம் மலைக்கு சென்றும் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை ஏன்?

ஒரு மனிதன் தீர்த்த யாத்திரை செல்வதும், ஆலயங்களுக்குச் செல்வதும், தான, தர்மம், செய்வதும் அவனுக்குப் புண்ணியத்தை சேர்ப்பதற்கும் அவனுடைய வாழ்க்கை சிறக்கவும், அவன் குடும்பத்தினர் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காகவாகும்.

ஆனால் சில மலையேறும் சுவாமிமார்கள் பல ஆண்டுகள் மலையேறியும் அவர்களுக்கு எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருந்ததை விட கீழே செல்கிறார்கள் கஷ்டப்படுகிறார்கள்.

காரணம் என்ன- எந்தவொரு பூஜை வழிபாடு ஆனாலும் அதை வழிபட ஒரு வழிமுறை இருக்கிறது. அதிலும் சுவாமி ஐயப்பன் விரதமுறை என்பது மிகவும் மாறுபட்டதொன்று. விரத முறைகளை சரியாக பின்பற்றாமல் மனதை ஒருவழிப்படுத்தாமல் தன்பாட்டில் தன் இஷ்டப்படி மாலை அணிந்து மலைக்கு செல்பவரே இவ்வாறு கஷ்ட்டப்படுவர்கள் ஆவார்கள்.

சுவாமிமார்களே மாலை அணிந்த பின்பு நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை பின்பற்றாது இருப்பது என்பது மிகப் பெரிய பாவத்தையும் குடும்பங்களின் கஷ்டத்தையும் தரவள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்.

சிலர் கூறுவர் மாலையணிந்து நீ செய்யும் பிழைகள் எல்லாம் கரிமலையில் உனக்கு கிடைக்கும் என்று அதில் உண்மை இப்போது அவ்வளவாக இருப்பதாக தெரியவில்லை காரணம் பெருவழியில் வசதி வாய்ப்புகள் கடைகள் எல்லாம் பெருகிவிட்டது என்பதானல் மாலையணியும் விரதத்தை சரியாக கடைப்பிடிக்காதவர்கள் மறுதடவை மாலையணிந்த போது அவர்களுடைய வாழ்க்கை தரமும், அவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் நிலையுமே அவருக்கு அவருடைய விரத்தை காட்டிக்கொடுக்கும் எனவே மாலை அனியும் சுவாமிமார்கள் எம் பெருமானிடம் பயமும் பக்தியும் கொண்டு அவனையே நித்தம் நினைத்து, அவன் விரத மகிமையை அனுபவித்து நன்மை பெறுங்கள்.

நீங்கள் தாங்கள் குடும்பமும் 18ம் படிக்குரிய நாயகனை, பகவானை குல தெய்வமாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

## விபூதி அணிவதன் சிறப்பு

விபூதியைத் தரிப்பதால் இம்மையிற் செய்த பாவம் நீங்குவதுடன் அநேக ஜென்மங்களில் செய்த பாவங்களும் நீங்குகிறது.

கள் குடித்தல், திருடுதல், பிரம்மத்தியைச் செய்தல் முதலிய பாவங்களைச் செய்தவன் விபூதியை அணிந்து ஸ்ரீ ருத்திரரைத் ஜபித்தால் சகல பாவங்களிலிருந்து நீங்குகிறான்.

ஆகவே தான் காடுகளிலும், மரத்தடிகளிலும் சிறந்த ஆலயங்களிலும் வாசம் செய்கின்ற துறவிகள் காவி உடை தரித்துக் கொள்கிறார்கள். மேலும் இம்மகிமையை விளங்கவே நமது ஆலயங்களிலும் கொடி ஏற்றங்கள் நடைபெறும் பொழுது அந்தக்கொடி சீலைகளிலும் வரைந்திருக்கும் படங்களும் காவியினாலேயே எழுதப்படுகின்றன.

## விரதம் அனுஷ்டிப்பது

விரதம் என்பது ஒரு உறுதி தான் ஒரு காரியத்தைக் கட்டாயமாக செய்து முடிக்க வேண்டியது என்று உறுதி பூண்டால் அதுவே விரதம். அவ்விதம் விரதம் பூணும்போது உப்பை விடுகிறோம் உணர்வை விடுகிறோம். தூக்கத்தை விடுகிறோம்.

பிறர் சொல்லும் கொடூர பேச்சுகளை பொறுப்பதும் எந்த உயிர்களையும் கொல்லாமல் இருப்பதுதான் விரதம். பிறர் குற்றத்தை மன்னித்து விடுவது மனிதத்தன்மை மறந்து விடுவது தெய்வத்தன்மை காப்பது விரதம் என்பது ஔவையார் திருவாக்கு. கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க என்பது முதுமொழி. விரதத்தை நோன்பு என்று சொல்வதுண்டு. நோன்பு அல்லது விரதம் இருந்தால் அனுஷ்டிப்பவரது மனம் பக்தி பரிசுத்தமாகிறது. அத்துடன் ஞானமும் கைகூடுகிறது.

விரதமிருந்தால் ஆன்மா ஈடேறுகிறது. செய்த பாவம் ஒழிகிறது. சக்திக்குத் தகுந்தபடி விரதம் அல்லது நோன்பு இருந்து சக்திக்குத் தகுந்தபடி தானம் செய்வதும் முக்கிய வழிகளாகும். விரதத்தை நித்திய விரதம், நைமித்திய விரதம் என்று இருவகைகளாகப் பிரிக்கலாம்.

மனித ஜென்மா தினமும் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளான அருள் உடைமை, இன்னா செய்யாமை, புலால் உண்ணாமை, கள் குடிக்காமை, ஜீவிம்சை செய்யாமை, தீயோரிடம் சேர்க்கை வைத்துக் கொள்ளாமை, கோபமில்லாமை, நல்லது பேசுவது, தவம் இருப்பது போன்ற ஒன்பது விதமான நித்திய விரதமாகும். இதை அனுசரித்தால் நமது ஆன்மா ஈடேறுகிறது.

படிப்பாலும் பணத்தாலும் கடவுளைக் காணமுடியாது. பக்தியினால்தான் கடவுளைக் காண முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதம்

நானுடன் தீர்மானிக்கும் விரதமும் விரதமல்ல. நானுடன் செய்யும் பூஜையும் பூஜையுமல்ல நானிருக்கும் ஆச்சாரமும், ஆச்சாரமல்ல, நானெதில் கூடாத விரதமே பக்தியாகும் என்ற படி நான் எனது என்பதை விட்டுவிட்டு உண்பதில், உறங்குவதில், உடுப்பதில்.உணர்வதில், உறைவதில், விழிப்பதில், தூங்குவதில், பேசுவதில், பார்ப்பதில், நடப்பதில், ஒடுவதில், ஓட்டுவதில், வாழ்வதில், நினைப்பதில், கடைவியாகச் சேர்வதில், அகண்டானந்த ஸஜ ஸன்மார்க்க தெய்விகாதமீக உத்கருஷ பக்தியால் மனம் மெய் மொழியால் செயலால் சரணடைவதே முன்னுரையாகும்.

கடவுள் எங்கோ இல்லை தன்னுள்ளேயே பார். பார்த்துப் பார்த்து உன்னிடமுள்ள ஒரு கோடியே அறுபத்து நான்கு அணுக்களில் பக்தி பகவானை நிரப்பினால் அதில் மகத்தான பரம்பொருள் பகவானைக் காணலாம். அதன் பின்பு தான் வெளியே இறைவனைக் காணும் தகுதியும் ஆற்றலும் கிடைக்கும். இறை அருளைத் தாங்கும். சக்தியை இறைவனே கொடுக்க வேண்டும். ஒரு தடைவை கண்டுவிட்டால் விலகமாட்டார். நம்மை விட்டுவிட மாட்டார் இறைவன்.

## பூஜை முறைகள்

பூஜை செய்பவர் வெள்ளை வஸ்திரமோ, நீல வஸ்திரமோ, தரித்துக் கொள்ளவேண்டும், விபூதி தரித்து பிறகு ருத்திராட்சமோ, துளசி மாலையோ அணிந்து கொள்ளவேண்டும் பிறகு பூஜைக்கு உட்கார வேண்டும்.

பக்தி பணிவு ஜீவகாருண்யம், போதுமென்ற எண்ணம் இவையுள்ள பக்தர்கள் எந்த வித பூஜை நடத்தினாலும் தர்ம சாஸ்தா திருப்தி அடைகிறார். பக்தி இல்லாதவர்கள் எவ்விதம் பூஜித்தாலும் அவர் திருப்தி அடைவதில்லை பெரிய பூஜை பண்ணுகிறவன் என்ற ஆணவம் உடையவனும் பூஜைக்கு வேண்டும் பொருள்கள் போதாதென்று சொல்லுகிறவனும் பூஜை நடத்தக் தகுதி உடையவன் அல்லன் ஒன்றுமில்லாதவன துளசியையும் தண்ணீரும் மட்டும் வைத்துப் பூஜித்தாலும் போதுமானது.

தெய்வங்களுக்கு பல்வேறு வகையில் அர்ச்சனை செய்தாலும் பூவினிலே இறைவனுக்கு அர்ச்சனை செய்வதை பூஜை என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. அதுவே பிற்காலத்தில் காலப்போக்கில் பேசி பூஜை என்று அழைக்கிறார்கள்.

பூஜை சமயத்தில் மணி அடிக்கிறார்கள் அதன் அடிப்படை நோக்கமென்ன? அசுரர்களை விரட்டுவதற்காகவும் தேவர்களை அழைப்பதற்காகவும் பூஜை சமயத்தில் மணி அடிக்கிறோம் இது விளக்கேற்றப்படும் சமயத்திலேயே இருள் விலகி ஒளி தோன்றுவது போல் ஒரே சமயத்தில் நடைபெறுகிறது. மணி அடித்தால் சுவாமி வந்து விடுவார் என்ற கருத்து நிலவுகிறது. ஆதலால் இறைவனை நாம் எழுந்தருளச் செய்யும் பூஜை காலத்தைத் தவிர மற்ற சமயத்தில் மணி அடிக்க கூடாது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் ஒரு மண்டலம் நோன்பு அனுஷ்டிக்க வேண்டும்?

மனிதனை ஆட்டிப்படைக்கும் பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றைத் தன் இஷ்டம் போல் அலையவிடாமல் கட்டுப்படுத்தவே ஒரு மண்டல நோன்பு கடும் சுகவீனமுற்றவருக்கு வைத்தியர் தொடர்ந்து மருந்து கொடுத்துச் சுகப்படுத்துவர் அதுபோலவே இந்த நீண்ட விரதமும் அமைகிறது.

இந்த பஞ்சேந்திரியங்கள் நல்லவற்றையே செய்ய இறைவன் படைத்திருக்கிறான். ஆனால் அவை தன்னிஷ்டப்படி உண்ண வேண்டாத உணவுகளை உண்டு மனம் பார்க்கத் தகாத காட்சிகளைப் பார்த்து. முகரத்தகாத மணங்களை முகர்ந்து அளவிலாச் சப்தங்களைக் கிரகித்து கடும் சொற்களைப் பேசி மனத்தைச் சஞ்சலப்படுத்துகிறது. அதுமட்டுமின்றி ஆணவத்தால் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் சொற்களையும் பிரயோகின்றன. இவை எல்லாவற்றையும் வயப்படுத்தி இந்த நோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது.

ஐயனைக் காண வேண்டுமாயின் தேகபலம், பாதபலம் மட்டுமின்றி மனோபலத்தையும் பெறவேண்டும். தேக ஆரோக்கியத்திற்குப் பிரம்மச்சரியம் இன்றியமையாதது. மேற்கூறியவற்றைச் செவ்வனே கடைப்பிடித்தால் ஐயன் பரிபூரண பலத்தையும் தந்திடுவான் என்பதில் ஐயமில்லை.

## துளசி மாலை எதற்காக அணிய வேண்டும்

வீட்டில் துளசிச் செடியைப் பக்குவப்படுத்தி வளர்க்கிறோம். வசதி உள்ளவர்கள் வீட்டில் துளசி மாடத்தை அமைத்துப் பூஜிப்பார்கள். அதற்கு ஒரு தத்துவம் உண்டு.

எம்மை ஈன்றெடுத்தவள் தாய், துளசி என்பது மகாலட்சுமியின் மறுவடிவமே. துளசித் தாய் இருக்குமிடத்து நாராயணன் முதல் சகல தேவர்களும் குடிகொண்டிருப்பார்கள். தீட்டு துடக்குகள் விலக்கப்பட்டுள்ளது. எனவே ஐயப்பமார்கள் இத்துளசி மாலையை அணிவதே சாலச் சிறந்தது. அதுமட்டுமா துளசி நீரைத் தினம் அருந்தி வந்தால் உடல் பிணிகள் நீங்கிச் சுகமடைவோம். துளசி மாலையை அணிந்தவுடன் எம்மை அறியாமலேயே ஒரு புத்துணர்ச்சி பெறுவோம் அதுமட்டுமின்றிக் காட்டு மிருகங்கிளிலிருந்து கொடிய விஷ ஐந்துக்களிடமிருந்து காப்பாற்றப்படுகிறோம் என்பதையும் மறக்கலாகாது. துளசித் தாயானவள் துணையிருக்கும் போது மனகலக்கம் எதற்கு.?

## ஏன் புலால் உண்ணக் கூடாது

புனிதத் தாயின் மாலை கழுத்தில் இருக்கிறது. வருடத்தில் 300 நாட்கள் நாம் விரும்பியதைச் செய்கிறோம். மிகுதி 65 நாட்களே! அடுத்து வரும் நாட்களை எப்படி வாழப்போகிறோம் என்பதன் பரீட்சையே விரதம்.

தாவர போசனம் சாத்வீக உணவு, புலால் காம உணர்ச்சிகளைத் தூண்டக் கூடியது. இத்துடன் வெங்காயம், பூண்டு, காரம் என்பவற்றையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்திரியங்களின் சேஷ்டையினால் விரத பங்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே புலால் உண்பது ஐயப்ப விரதத்தில் முக்கியமாக் கடைப்பிடிக்கப்படும் பிரம்மச்சாரிய விரதத்திற்கு ஊறு விளைவிக்கும். அதனால் புலால் உணவைத் தவிக்க வேண்டியது ஐயப்பமார்களின் கடமைகளில் ஒன்றானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் கறுப்பு ஆடை ஆணிய வேண்டும்

கறுப்பு ஆடை மங்களகரமற்றது என்றும் துக்க காரியங்களுக்கும் சிலர் அணிகின்றனர் எனச் சிலர் அவலட்சணமாகக் கருதுகின்றனர். ஐயப்பனுக்கு உகந்தது கறுப்பு நிறமே! கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் கறுப்பு உடையணிந்த ஐயப்பமார்கள் பளிச்சென்று தெரிவதில்லை. இருள் சூழந்த வேளையில் நாமும் இருளாகவே இருப்போம். அடுத்ததாகக் கறுப்பு நிற ஆடை அணிந்தவர்கள் ஐயப்பமார்கள் என்று வீட்டுக்கு விலக்கான பெண்கள் தாமாகவே ஒதுங்கிக் கொள்வார்கள்.

## ஏன் படுக்கை தலையணையை நீக்கிச் சிறு துண்டை மட்டுமே தரையில் விரித்துத் துயில வேண்டும்

மலைக்கு இவற்றைக் கொண்டு செல்ல முடியாது. அத்துடன் தலையணையும் படுக்கையில் சிந்தனையைத் திசை திருப்பி மனக்கிலேசம் ஏற்பட்டு விரதபங்கம் ஏற்பட வாய்ப்புண்டு. நம் முன்னோர்கள் படுக்கையிலா உறங்கினார்கள்.?

## பாதணி ஏன் அணியக் கூடாது?

காடு மலைகளைக் கடக்கும் போது பாதணி நல்ல பலனைக் கொடுக்காது. சில வேளைகயில் சறுக்கவும் வாய்ப்புண்டு. அதுமட்டுமின்றி ஐயப்ப பக்தர்களுக்கு ஒரே நியதி. ஏழை பணக்காரன் உயர்நதோர் தாழ்ந்தோர் பெரியோர் சிறியோர் என்பவை ஐயன் சன்னதியில் கிடைக்காது.

ஆம் கலியுக வரதன் அவதரித்து நமது கவலை. கஷ்டங்களை நீக்கிக் கருணை வடிவமாச் சபரிமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஐயப்ப சுவாமியைத் தரிசிக்கக் கடுமையான விரதமிருந்து இருமுடிதாங்கி காடு மலைகளையெல்லம் கடந்து தரிசன வேட்கையைத தவிர வேறு எதுமின்றி நாவிற்கினிய சரணங்களை முழங்கி அவன் திருவடியைத் சரணடைவோரை தெய்வமாக்கவல்ல சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மகத்துவம் அளவிடற்கரியதாகும்.

மனிதனைத் தெய்வமாக்கும் சுவாமியே சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஐயப்பன் வரலாறும் விரத மகத்துவமும்

மனிதனைத் தெய்வமாக்கும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மகத்துவம்

எங்கும் நிறைந்தவர் இறைவன் அவனை அகக் கண்ணால் இதய சுத்தியுடன் மட்டும் காணமுடியும். இப்பூமியில் உயிர்களாகிய நாம். எண்ணற்ற காலமாகப் பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்றோம். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து விட்டோம். நாம் பெறாத உயிர்களுமில்லை எம்மைப் பெறாத உயிர்களும் இல்லை.

உயிர்கள் எங்கிருந்து பிறக்கின்றன? ஏன் பிறக்கின்றன? பின் எங்கு செல்கின்றன? விஞ்ஞானிகள் கூடக் கண்டிலர். மெய்ஞ்ஞானி கூறுகிறார் உயிர் புல்லாகி, பூடாய், புழுவாய் மரமாகிப் பலவுருவாய், பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், வல்லரக்காரகி, முனிவராய், தேவராய் இத்தாவர் சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து விட்டோம் என்று விஞ்ஞான யுகத்தில் அஞ்ஞானம் போக்கி மெய்ஞ்ஞானத்தைச் சீர்தூக்கி பார்க்குமிடத்து அகண்டாகரமாய் எங்கும் நிறைந்து விளங்கும் ஐயப்பன் ஸ்ரீ பூதநாதன் எல்லா உயிர்களின் உடம்பிலும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார்.

நாம் பசி, தாகம், சோர்வு ஆகியவற்றை இலட்சியம் செய்ய வானளாவிய மரங்கள், முட்கள், கொடிகள், கற்பாறைகள், மேடு பள்ளங்கள் மட்டுமன்றி விஷ ஜந்துக்கள், மிருகங்கள் நிறைந்த வனந் தாண்டி இறைவன் சன்னதியைச் சென்று பிம்பத்தில் சன்னித்தியமாகியிருக்கும் பகவானைத் தரிசித்து மகிழ்கின்றோம்.

நம் ஆகத்துள்ள கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சபரிநாதனைச் காணவேண்டுமாயின் ஆசைத் தளைகள், அகங்காரம் என்ற மரங்கள் தீய எண்ணங்கள் என்ற மிருகத்தையும், ஆணவம், கன்மம், மாயை என்ற மாயவனத்தைக் கடந்தால்தான் ஐயன் ஸ்ரீ ஐயப்பனைத் தரிசிக்கலாம்.

இப்பூவுலகில் பகவான் ஐயன் அவதரித்து நீ என்னைக் காண வேண்டுமாயின் பற்றற்ற கருமம் செய. மனம் பெறாத தூய மனதில் ஞானம் ஒளிரும் என்று கூறினார்.

ஞானமே வாழ்க்கையின் இலட்சியம், நற்கருமத்திற்கு இடையூறு விளைவிப்பது காமம், வெகுளி, பேராசை, குரோதம், ஆணவம், முதலியன. இவற்றை வெல்ல "சுவாமியே சரணம் ஐயப்பா" என்ற தாரக மந்திரத்தை தூய மனதுடன் ஓதி அவனது அருட் கடாற்சத்தைப் பெறவேண்டும்.

ஐயனைக் காண ஒரு மண்டலம் நோன்பு இருக்க வேண்டும். (41 நாட்கள்) என்பது தொன்று தொட்டு வரும் மரபு. நோன்பு மனிதனைப் பக்குவப்படுத்துகிறது. மாலை அணிந்து கொள்வது நமக்கு நாமே விரும்பி விதித்துக் கொள்ளும் கட்டுப்பாடே விஞ்ஞான யுகத்திற்கு தேவையானவற்றை மெய்ஞ்ஞானிகள் அன்றே கூறியிருக்கின்றார்கள்.

வனங்களைக் கடந்து சன்னிதானத்தை அடையும்போது பதினெட்டுப் படிகள் தாண்டியே செல்ல வேண்டும். இந்த பதினெட்டுப் படிகளுக்கும் தத்துவம் புலன் ஐந்து, பொறி ஐந்து பிராணன் ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் இவற்றைக் கடந்தாலே ஐயனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் மாலை போடும் போது சொல்ல வேண்டிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம்

குரு முத்ராம் நமாம்யஹம்

வனமுத்ராம் நமாம்யஹம்

வனமுத்ராம் சுத்த முத்ராம் ருத்ர

முத்ராம் நமாம்யஹம்

சாந்த முத்ராம் சத்திய முத்ராம்

வ்ருத முத்ரதம் நமாம்யஹம

சபரியாஸ்ரம சத்யனே முத்ராம்

பாது ஸதாபிமே

குருதஷிணயா பூரவ்ம் தஸ்யாது

அநுக்ரஹ காரிணே

சரணாகதே முத்ராக்யாம் த்வன் முத்ராம்

பக்த முத்ராம் நமாம் யஹம்

சின்முத்ராம் கேசரிமுத்ராம் பத்ர முத்ராம் தாரயாம்யஷம்

சபரியாசல முத்ராயை நமஸ்துப்பயம்

நமோ நம

தீபா நந்த்ரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

இதைச் செல்லிச் சரணம் கூப்பிட்டுப் பின் மாலை அணிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரப் பாடல்கள்
# பஜனைகள்

## ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## விநாயகர் துதி

கஜானன் பூத கணபதி சேவிதம்
கபித்த ஜம்பூ பலசார பஷிதம்
உமாசுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்கேஸ்வர பாத பங்கஜம்

## கன்னிமூல கணபதியே

கன்னிமூல கணபதி காக்க வேண்டும் கணபதி
எண்ணி வந்தோம் கணபதி ஏற்க வேண்டும் கணபதி

ஞானப்பழம் பெற்றவா ஞானம் தந்த கொற்றவா
நாயகனே ஓடி வா நல்லவரைக் காக்க வா

சண்முகக் கடவுளும் சபரிகிரி வாசனும்
சக்தி அன்னை தேவியும் சங்கரனார் நால்வரும்

நாளும் போற்றும் கணபதி நலம் அருள்வாய் கணபதி
நாமமெல்லாம் கணபதி தேவமெல்வாம் கணபதி

மூலவனே கணபதி மூத்தவனே கணபதி
மூடரையும் காத்து விடும் முக்கனியே கணபதி

முதல் வணக்கம் கணபதி முடிவுரையே கணபதி
காக்க வேண்டும் கணபதி கன்னிமூல கணபதி

## கணபதி தோத்திரங்கள்

மூஷிக வாகன மோதக ஹஸ்த சாமரகர்ண விளம்பித ஸூத்ர
வானமரூப மஹேஸ்வரபுத்ர விக்ன விநாயகர பாத நமேஸ்தே
ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா.

குரு பிர்மா குரு விஷ்ணு
குரு தேவா மஹேஸ்வர
குரு ஷாஷாத் பரப்பிரம
தஸ்மை ஸ்ரீ குருவே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றெட்டு சரணக்கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹரா சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப்புழைப்பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் சாந்தம் நிறை மெய்ப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் துளசிமணிமார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இருமடிப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேட்டைத்துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரும் ஆணவத்தை ஆழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேருத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேதமையே ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் காளை கட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிர்வேட்டுப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அமுதா நதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் அமுதை மலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆனந்தமிகு பஜனைப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இஞ்சிப் பாரைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரியிலந்தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஸ்ரீ இராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சக்திபூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீப ஜோதித் திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உரல்குழிதீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கடுத்த சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
நிக்க வைச்சி சொக்க வைப்பாய் ஐயப்பா - எங்களை
நிக்க வைசசி சொகக்க வைப்பாய் ஐயப்பா (வட்ட நல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே ஓடுது

எங்கே ஓடுது எங்கே ஓடுது கூட்டம் எல்லாம் எங்கே ஓடுது
அங்கே ஓடுது அங்கே ஓடுது சன்னிதானம் நோக்கி ஓடுது
எங்கே போகுது எங்கே போகுது சுவாமிமார்கள் எல்லாம்
எங்கே போகுது
ஹரிஹரசுதனின் தரிசனம் காண சபரிமலை நோக்கி ஓடுது

கன்னிமூல கணபதிக்கு வந்தனம் சொல்லி
குருநாதன் துணையோடு போகணும்
சன்னிதானம் நடைதிறந்து காரணம்
சாமிமார்கள் எல்லாம் அவரைப் பார்க்க முந்தணும்
வனமாடும் தேவரையும் நினைக்கணும் நம்ம
வாபரனின் பெயரை சொல்லி ஓடணும்

ஓடும் போது சரணகோசம் விளிக்கணும்
அந்த மந்திரமே நம்மை சொரக்கும் சீக்கிரம்

சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா (எங்கே ஓடுது)

கல்லோ முள்ளோ குன்றோ குழியோ
போடும் சரணகோசம் தாண்ட வைச்சது
கரியோ புலியோ உலவிடும் மலையோ
சுரிகயுதம் சரணம் தூர ஓடுது
தாவனம் எங்கும் பயணிகள் முழங்க
கன்னிசாமி பரவசமாக
மீண்டும் ஏற்றம் ஓட்டம் துள்ளளாட
சரணம் விளிக்க விளிக்க யாவும் முன்னேற
சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா (எங்கே ஓடுது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயன பார்த்து..

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா
கன்னிமூல கனபதி பகவானே சரணம் ஐயப்பா
ஓம் காந்த மலை ஜோதியே சரணம் ஐயப்பா
எங்கள் ஐயப்பா தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் மணிகண்டா தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

ஐயன் பார்த்து ஐயன் பார்த்து வருகவகனக்காசி
மறுபடியும் பார்ப்பதற்கு நாள் குறிச்சாச்சி
கட்டும் கட்டி நடநடந்து ரொம்ப நாளாச்சி
மறுபடியும் நடப்பதற்கு நட திறந்தாச்சி

ஐயாவுக்கு ஒரு சரணகோசம்
எங்கள் மணிகண்டனுக்கும் ஒரு சரணகோசம்
எங்க குருவுக்கும் ஒரு சரணகோசம்
எங்க குருவுக்கு ஒரு சரணகோஷம்
எங்க கருப்பனுக்கும் ஒரு சரணகோஷம்

நெய் மணக்க நெஞ்சமுருக பாட வந்தோமே
மறுபடியும் ஐயன் முகம் பார்க்க போறோமே
குரு சாமி துனையோடு நாங்க வாரோமே
கண்ணி சாமி மக்களையும் கூட்டி வாரோமே - ஐயாவுக்கு

சந்தனம் மணக்க குங்குமம் மணக்க நாங்க வாரோமே
மறுபடியும் காட்டு வழியில் தொடர்ந்து வாரோமே

கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தையாக வேணுமே
கருப்பு சாமி துனையாக நீங்க வரணுமே - ஐயாவுக்கு

எறுமேலி பேட்டை துள்ளி நாங்க வாரோமே
பம்பையில் பாவங்களை தொலைச்சி வாரோமே
கன்னி மூல கணபதியை வணாங்கி வாரோமே
நீலி மலை ஏற்றமெல்லாம் ஏறி வாரோமே - ஐயாவுக்கு

ஐயன பார்த்து ஐயன பார்த்து வருசகனன்னாச்சி
மறுபடியும் பார்ப்பதற்கு நாள் குறிச்சாச்சி
கட்டும் கட்டி நடநடந்து ரொம்ப நாளாச்சி
மறுபடியும் நடப்பதற்கு நட திறந்தாச்சி

பதினேட்டாம் படியேறி நாங்க வாரோமே
ஐயா உன் பொன் முகத்தை பாக்க போரோமே
இரு முடிய சுமந்து கிட்டு நாங்க வாரோமே
ஐயா உன் பொன் முகத்தை பாக்க போரோமே - ஐயாவுக்கு
- ஐயன பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுடியை சுமந்து வந்தேன்

இருமுடியை சுமந்து வந்தேன் இரக்கம் இல்லையா!
இறைவா உன் சோதனைக்கோர் அளவும் இல்லையா!

அழுதையிலே குளித்து வந்தேன் நீ அறியவில்லையா !- நான்
அருகே ஓர் கல்லெடுத்தே வைக்கவில்லையா ! - அந்த
கருடன் என்னை கண்டதாக சொல்லவில்லையா ! (இருமுடியை)

பம்பையில் குளித்து வந்தேன் அறியவில்லையா !
பம்பா நதி போஜனம் நீ உண்ணவில்லையா!
பம்பையிலே விளக்கெடுத்தேன் நீ காணவில்லையா
பகவானே உனக்கு கூட சாட்சி தேவையா ! (இருமுடியை)

பதினெட்டு படிகளேறி வரவுமில்லையா! - நான்
படிதேங்காய் உடைத்த சத்தம் கேட்கவில்லையா !
கொடிமரத்தை சுற்றி வந்தேன் காணவில்லையா ! - அங்கே
கூடி நின்ற ஜனங்களைப்போய் கேட்டுப்பாரய்யா (இருமுடியை)

நெய் அபிஷேகம் செய்தேனே நினைவுமில்லையா ! - உன்னை
மெய்யுருக பாடியதும் கேட்கவில்லையா !
ஐயா உன் சரணமென்றே கதறவில்லையா - நீ
அகிலமெல்லாம் காத்தருளும் ஜோதியல்லாவ - (இருமுடியை)

## சரணம் சொல்லி கூப்பிடுவோம்

சரணம் சொல்லி கூப்பிடுவோம் சபரிமலை வாசனை
அருளைத்தரும் ஆண்டவனை அன்பருக்கு மித்திரனை
சிரம் தாழ்த்தி வணங்கிடுவோம் ஹரிகர சுதன் ஐயப்பனை

வில்லாலி வீரனே வீரமணி கண்டனே அவர்
சொல்லெடுத்துப் பாடுவோம் சுந்தரேசன் மைந்தனை
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா //

சபரிமலை செல்பவர்க்கு சஞ்சலங்கள் இல்லை
பயம் தனையே போக்கிடுவான் பத்தளத்தின் பிள்ளை
அபயம் என்று சரணடைந்தால் அகன்றிடுமே தொல்லை
அவன் இன்றி அவனில்லை அணுவுமசைவதில்லை
வீட்டை விட்டு கட்டும் கட்டி அருள்மலை புறப்படுவோம்
பூட்டு சரணம் போட்டு எரிமேலி போட்டை செ.
சாமி திந்தக தோம் ஐயப்ப திந்தக்க தோம் //
போட்டை துள்ளி ஆடும் போது பேரின்பம் கொள்வோம்
கோட்டை காவல் வாசர் சாமிமை கொண்டாடி மகிழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா //

சீர்மேவும் சபரிமலை நாதன் அருள்தோடு
ஈரொன்பது படி ஏறு ஈசன்புகழ் பாடு
பாரல்லாம் காத்து நிற்கும் பரமனின்
நாராயணன் செல்வனையே தாவினிக்க பாடு

சாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா //

## ஐயன் பவனி

பவனிவாரார் இங்கே சுவாமி சரணம் ஐயப்பா
வாபர் சுவாமி கூடவாரார் சரணம் ஐயப்பா
காவலர்கள் கூட வாரார் சரணம் ஐயப்பா
ஆவலோடு கூப்பிடுவோம் சரணம் ஐயப்பா (பவனி)

அன்பும் வில்லும் கையில் ஏந்தி சுவாமி வருகிறார்
எம் பெருமான் துள்ளித் துள்ளி ஆடி வருகிறார்
துன்பம் எல்லாம் தீர்த்திடவே பவனி வருகிறார்
இன்பமோடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா (பவனி)

தந்தை தாயும் ஆன சுவாமி பவனி வருகிறார்
வேதியர்கள் சபை நடுவே சுவாமி வருகிறார்
பூதப் படைப்புகளுடன் ஐயன் வருகிறார்
இத்தருணம் காத்திடுவார் சரணம் ஐயப்பா (பவனி)

கடகடவென பேரி முழங்க சுவாமி வருகிறார்
கொட்டு வாத்தியம் முழங்கிட ஐயன் வருகிறார்
மாடன் சடையன் பொருளன் இருளன் சரணம் ஐயப்பா
ஓடி வரவே பவனி வாரார் சரணம் ஐயப்பா (பவனி)

மின்னல் போல ஒளி விளங்க சரணம் ஐயப்பா
பொன்னுமேனி கண்டிடவே சரணம் ஐயப்பா
தனிச்சிலம்பு சல்லடையும் சரணம் ஐயப்பா
கண கணவென சலங்கை குலுங்க பவனி வருகிறார் (பவனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டும் கட்டு பள்ளிக்கட்டு

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்னு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்னு //

அஞ்சுமலை அழகா - ஐயா அஞ்சு மலை அழகா
எங்க நெஞ்சில் அழகா - வந்து தங்கிட வாருமய்யா
மாலை போட்டு மனபாரம் போனதய்யா
காவி போட்டு கனகாமம் பறந்ததய்யா
காரணம் நீயில்லையா .... (கட்டும் கட்டு பள்ளிக்கட்டு)

நோன்போடு நாமிருந்தோம் - நோயோடிப் போனதயயா //
சூடம் கொழுத்திக்கிட்டோம் - சூது மறைந்தய்யா
சந்தனம் பூசிக்கிட்டோம் - சாந்தி கெடச்சதய்யா
தண்ணி தெளிச்சிக்கிட்டோம் - பக்தி வளர்ந்ததய்யா
நாடாளும் ராசாவே சத்தியம் நிச்சயம் நீயே

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்ணு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்ணு
(அஞ்சுமலை அழகா)

பம்பா நதி குளிச்சோம் பாவம் தொலஞ்சதய்யா
நீலிமலையடைஞ்சோம் நிம்மதி வந்ததய்யா
சாமி உன் சன்னதியில் சஞ்சலம் தீர்ந்ததய்யா
ஜோதி தரிசனத்தில் ஆவி குளிர்ந்ததய்யா
நாடாளும் ராசாவே சத்தியம் நிச்சயம் நீயே

கட்டும் கட்டு பள்ளிக்கட்டு சபரிமலைக்கிண்ணு
இருமுடிகட்டு பெருமுடிகட்டு சபரிமலைக்கிண்ணு
(அஞ்சுமலை அழகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமுடி தாங்கி ஒருமனதாகி

இருமுடிதாங்கி ஒருமனதாகி குருவெனவே வந்தோம்
இருவினை தீர்க்கும் எமனையும் வெல்லும்
திருவடியைக் காணவந்தோம்

பல்லவி

பள்ளிக்கட்டு சபரி மலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
நெய்யபிஷேகம் ஸ்வாமிக்கே
கற்பூர தீபம் ஸ்வாமிக்கே
ஐயப்பமார்களும் கூடிக்கொண்டு
ஐயப்பனை நாடிச் சென்றிடுவார்
சபரிமலைக்கே சென்றிடுவார் (ஸ்வாமி)

அநுபல்லிவி

கார்த்திகை மாதம் மாலையணிந்து
நேர்த்தியாகவே விரதமிருந்து
பார்த்த சாரதியின் மைந்தனே உனை
பார்க்க வேண்டியே தவமிருந்து
இருமுடி எடுத்து எருமேலி வந்து
ஒருமனதாகிப் பேட்டை துள்ளி
அருமை நண்பாராம் வாவரைத் தொழுது
ஐயனின் அருள் மலை ஏறிடுவார் (ஸ்வாமி)

அழுதை ஏற்றம் ஏறும்போது
அரிஹரன் மகனைத் துதித்துச்செல்வார்
வழி காட்டியே வந்திடுவார் அய்யன்
வன்புலி ஏறி வந்திடுவார் அய்யன்
கரிமலை ஏற்றம் கடினம் கடினம்
கருணைக் கடலும் துணைவருவார்
கரிமலை இறக்கம் வந்தவுடனே
பெருநதி பம்மை கண்டிடுவார் (ஸ்வாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை நதிபோல் புண்ணிய நதியாம் பம்பையில் நீராடி
சங்கரன் மகனைக் கும்பிடுவார்
சஞ்சலமின்றி ஏறிடுவார்
நீலி மலை ஏற்றம் சிவபாலனும் ஏற்றிடுவார்
காலமெல்லாம் நமக்கே அருட் காவலனாயிருப்பார்
தேகபலம்தா என்றால் அவர் தன் தேகத்தைத் தந்திடுவார்
பாத பலம்தா என்றால் அவர் தன் தேகத்தைத் தந்திடுவார்
பாத பலம்தா என்றால் அவர்
தன் பாதத்தைத் தந்திடுவார் - நல்ல
பாதையைக் காட்டிடுவார் (ஸ்வாமி)

சபரி பீடமே வந்திடுவார்
சவரி அன்னையைப் பணிந்திடுவார்
சரங்குத்திஆலில் கன்னிமார்களும்
சரத்தினைப் போட்டு வணங்கிடுவார்
சபரிமலை தனை நெருங்கிடுவார்
பதினெட்டுப்படி மீது ஏறிடுவார்
கதி யென்றவனைச் சரணடைவார்
மதி முகம் கண்டே மயங்கிடுவார்... அய்யனைத்
துதிக்கையில் தன்னையே மறந்திடுவார்
பள்ளிக்கட்டு சபரிமலைக்கு
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
சாமியே ஐயப்போ சுவாமியே ஐயப்போ
சரணம் சரணம் ஐயப்போ சாமி சரணம் ஐயப்போ (ஸ்வாமி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் சரணம்

பகவான் சரணம் பகவதி சரணம்
சரணம் சரணம் ஐயப்பா
பகவதி சரணம் பகவான் சரணம்
சரணம் சரணம் ஐயப்பா

அகமும் குளிரவே அழைத்திடுவோமே
சரணம் சரணம் ஐயப்பா
பகலும் இரவும் உன் நாமமே
சரணம் சரணம் ஐயப்பா

கரிமலை வாசா பாபவினாசா
சரணம் சரணம் ஐயப்பா
கருத்தினில் வருவாய் கருணையைப் பொழிவாய்
சரணம் சணரம் ஐயப்பா

மஹிஷி சமஹபாரா மதகஜ வாகனா
சரணம் சரணம் ஐயப்பா
சுகுண விலாசா சுந்தர ரூபா
சரணம் சரணம் ஐயப்பா

ஆறுவாரமே நோன்பிருந்தோமே
பேரழகா உன்னைக் காண வந்தோம்
கால் அபிஷேகம் உனக்கப்பா
பாலனைக் கடைக்கண் பாரப்பா

முத்திரை தேங்காய் உனக்கப்பா
தித்திக்கும் நாமம் எமக்கப்பா
கற்பூர தீபம் உனக்கப்பா - உன்
பொற்பத மலர்கள் எமக்கப்பா

தேவன் பாதம் தேவி பாதம்
சேவடி சரணம் ஐயப்பா
நாவினில் தருவாய் கீதமப்பா
தேவை உன் திருப்பாதமப்பா

நெய்யபிஷேகம் உனகக்கப்பா - உன்
திவ்ய தரிசனம் எமக்கப்பா
தையினில் வருவோம் ஐயப்பா - அருள்
செய்யப்பா மனம் வையப்பா

பகவான் சரணம் பகவதி சரணம்
பகவானே பகவதியே தேவனே தேவியே
ஸ்வாமி சரணம் ஐயப்பா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவருமில்லே இவருமில்லே

அவருமில்லே இவருமில்லே ஐயப்பா - எங்க ஆதரவே
நீங்க தானே ஐயப்பா //

கட்டும் முடி கட்டி விட்டோம் - ஐயப்பா
எங்க கவனமெல்லாம் சபரிமலை ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)
நல்ல குரு நாதனப்பா - ஐயப்பா
உங்கள் நம்பி சாண் புகுந்துவிட்டோம் ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)

நாற்பது நாள் விரதம் வச்சோம் - ஐயப்பா
எம்மைக் காப்பது உன் கடமையப்பா ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)
வீடு வாசல் மறந்து விட்டோம் - ஐயப்பா
ஜோதி விளையாட்டுப் பாக்க வந்தோம் ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)

காடு களனி பறந்து புட்டோம் ஐயப்பா
சபரிக்காடு மட்டும் நெனச்சிப் புட்டோம் ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)
குதிரை போல வாகனத்தான் ஐயப்பா
நாங்க குந்தி வாரோம் உன் பொறுப்பு ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)

சாரதியாம் காரோட்டி ஐயப்பா
அவன் உன்னைப் போல கவனக்காரர் ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)
கன்னிசாமி கடுத்தசாமி ஐயப்பா
நாங்க கலவையான கூட்டம்பா ஐயப்பா (அவருமில்லே இவருமில்லே)

பாட்டுப்பாடி பஜனைபாடி ஐயப்பா
நாங்க ஊருபல தாண்டி வாரோம் ஐயப்பா
வாழ்க்கை ஒரு மேடுபள்ளம் ஐயப்பா
இந்த வழியில் கூட இருக்குதப்பா பாரப்பா (அவருமில்லே இவருமில்லே)

மலையாள தரையைத் தொட்டு ஐயப்பா
நாங்க அடைமழையா கௌம்பி வாரோம்
அம்பலங்கள் பலவும் தொட்டு ஐயப்பா
நாங்க அம்பு போல சீறி வாரோம் ஐயப்பா அவருமில்லே இவருமில்லே)

உன்பலம் தாய் பெரியதப்பா ஐயப்பா
இதை உணர்த்துப்பா உன் பயணம் ஐயப்பா
கோட்டை எட்டைத் தாண்டுகிறோம் ஐயப்பா
உன் பாட்டை இப்போ பலமாச்சு ஐயப்பா அவருமில்லே இவருமில்லே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சங்கோவில் அரசே.........

அச்சன் கோவில் அரசே என் அச்சம் தீர்க்கவா
பச்சை மயில் ஏறும் பன்னிரு கையன் சோதரா
இச்சை கொண்டேன் உந்தன் முன்னே ஈஸ்வரன்
மைந்தா - பச்சை வண்ணம் பரந்தாமன் மகிழும் செல்வா
சுவாமி பொன் ஐயப்பா சரணம் பொன் ஐயப்பா
சபரிகிரி நாயகனே சரணம் ஐயப்பா (சுவாமி)

ஆரியங்காவில் வாழும் ஆண்டவனே வா
பார்வதியால் அகமகிழும் பாலகனே வா
எருமேலி வீற்றிருக்கும் இறைவனே நீ வா
தர்மஞான சாஸ்தாவே தயவுடனே வா (சுவாமி)

மலைவீடும் சபரிமலை மன்னவனே வா
குறை தீர்க்கும் குளத்துப்பு பழை பாலகனே வா
மன்னவனே மணிகண்டனே மகிழ்வுடனே வா
வன்புலி மேல் காட்சி தரும் வள்ளலே நீ வா (சுவாமி)

தேவர்களும் உனைப்பணிய காந்த மலையிலே
நீ ஆவலுடன் காட்சி தந்தாய் ஜோதிட உருவிலே
காவலனே கண்ணாரக் கண்டோமே ஜோதிமலை
நாவார உனை அழைத்தோம் சாமியே சரணம் ஐயப்பா (சுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே மணக்குது

சாமி ஐப்பா சரணம் ஐயப்பா // சாமி ஐயப்பா சரணம் ஐயப்பா //
சுவாமியே ஐயப்போ சுவாமியே ஐயப்போ //
சாமியே சரணம் ஐயப்பா - சாமி சரணம் ஐயப்பா
எங்கே மணக்குது சந்தனம் எங்கே மணக்குது
ஐயப்ப சாமி கோயிலிலே சந்தனம் மணக்குது //
என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது //
இன்பமான ஊதுவத்தி எங்கே மணக்குது (எங்கே)

என்ன மணக்குது மலையில் என்ன மணக்குது //
நீல மணிகண்டன் சந்நிதியில் நெய்யும் மணக்குது
திருநீறும் மணக்குது - பன்னீரும் மணக்குது //
ஆண்டவனினி சந்நிதியில் அருளும் மணக்குது //
ஐயப்மார்கள் உள்ளத்திலே அன்பும் மணக்குது (எங்கே)

பள்ளிக்கட்ட சொமந்துக்கிட்டா பக்தி பிறக்குது
அந்த பனிமலையில் ஏறிடவே சக்தி இருக்குது
பகவானை பாத்துப்புட்டா பாவம் பறக்குது
பகவானை பாத்துப்புட்டா பாடம் முடியுது
பதினெட்டாம் படிதொட்டா வாழ்வும் இனிக்குது (எங்கே)

பேட்டை துள்ளி ஆடும் போது மனமும் துள்ளுது
ஐயன் பெரும் புகழைக் காண உள்ளம் ஆசை கொள்ளுது
காட்டுக்குள்குள்ளே சரணகோஷம் வானைப் பிளக்குது //
சாமியே சரணம் ஐயப்பா //
வீட்டை மறந்து மக்கள் கூட்டம் காட்டில் இருக்குது (எங்கே)
பூங்காவனத் தோப்புக்குள்ளே பவனி வருகிறான்
ஐயன் வேங்கை மேல் ஏறிவந்து நலமும் கொடுக்கிறான்
நோன்பிருந்து வருவோரைக் காத்து நிற்கிறான்
ஓங்கார நாதத்திலே எழுந்து வருகிறான் (எங்கே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியே சரணம் ஐயா

சுவாமியே சரணம் ஐயா
தர்ம சாஸ்தாவே சரணம் ஐயா
அனுதினம் பூஜை செய்தோம் - ஐயனே
உமக்கு அனந்தகோடி நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்
(சுவாமியே)

வன்புலி மீதினிலே ஏறி வீரமணி கண்டனே வா
உன் வீர விளையாடல்களைக காண வாணிதடை கூறவில்லை
(சுவாமியே)

கொஞ்சி கொஞ்சி பேசி உந்தன் பிஞ்சுமொழி
கேட்டிடவே அந்த பந்தளத்தோர் செய்த தவம்
இந்த பாமரர் நாம் செய்யவில்லையோ
(சுவாமியே)

பாலெடுத்து புலி எதற்கோ உன் பார்வையின்ப சக்தி அற்றதோ
உனட பார்வையொன்றோ போதுமய்யா
உடனே பால்பொழிய வேண்டுமய்யா
(சுவாமியே)

வில்லும் அம்பும் கையில் எதற்கோ அந்த வாவரை
நீ வெற்றிக்கொள்ளவா, பகத்தர்களின் வினைகளின் துயர்களை
வேட்டையாடி விரட்டிடவே
(சுவாமியே)

காந்தமலை யோதி தனை அந்த காந்தம் என்னை இழுக்குதய்யா
அதைக் காமக்கொடி நாதன் உருவில்
காண அருள் வேண்டுமய்யா (சுவாமியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி வருகிது

ஆடி வருகிது அசைந்தாடி வருகிது
ஐயனின் ஆபரண பெட்டி வருகிது
கருடன் வருகிது கூட கருடன் வருகிது
வானத்திலே வட்டமிட்டு சுற்றி வருகிது
பந்தளத்து எல்லைவிட்டு சபரி வருகிது
ஜோதி ரூபமான மேனி காண வருகிது
ஆனந்த ஊர்கோலமே ஐயன்
ஆபரண ஊர்கோலமே

குழு வழிவிடுசாமி வழிவிடுசாமி அது ஆடிவரும்
காட்சியெல்லாம் பரவசம் சாமி
பரசவம் சாமி பரவசம் சாமி அது ஆடிவரும்
காட்சியெல்லாம் பரவசம் சாமி ( ஆடிவருகிது)

ராஜ பரம்பரை தங்கபேழை வருகிது
தாயின் வீட்டு சீதனமாய் தவழ்ந்து வருகிது
சுமந்து வருகிது அதை சுமந்து வருகிது
புண்ணியமே செய்த உள்ளம் சுமந்து வருகிது
இலங்கைநூரை தாண்டி உள்ளநூரில் நுழையுது
இது ஆரன்முனை கோவிலுக்கு வந்து திரும்புது
ஆனந்த ஊர்கோலமே ஐயன்
ஆபரண ஊர்கோலமே

குழு வழிவிடுசாமி வழிவிடுசாமி அது ஆடிவரும்
காட்சியெல்லாம் பரவசம் சாமி
பரசவம் சாமி பரவசம் சாமி அது ஆடிவரும்
காட்சியெல்லாம் பரவசம் சாமி ( ஆடிவருகிது)

ஆடி வருகிது ஐயனட ஆபரணபெட்டி
புதிய காலிலும் பேரு நாட்டுக் கோவிலும்
பாதை காட்டும் சரித்திரமும் புனிதமானது
இலக்கல் கோவிலும் அர்த்த மூங்கில் கல்லுமே
ஆபரப்பெட்டி கண்டு அருளில் மூழ்குது
பெரியானை வட்டத்திலே விருந்து நடக்குது
அந்த விருந்தை ஏற்று புனிதப்பயணம் தொடர்ந்து நடக்குது
ஆனந்த ஊர்கோலமே ஐயன்
ஆபரண ஊர்கோலமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையும் ஏறுது நீலி மறையும் ஏறுது
நீல ஆடை பிரியரோட உடமை ஏறுது
அழைக்க வருகுது அதை அழைக்க வருகுது
மேல் சாந்தி உத்தரவு அழைத்து வருகிது
பஞ்சவாத்திய முழக்கத்துடன் படியில் ஏறுது
கடலில் பாயும் நதியெனவே அவனை சேருது

## ஐயப்பன் பாடல்
## காடென்ன மேடென்ன

காடென்ன மேடென்ன கல்லென்ன முல்லென்ன //
மலையேறி பாவன் தீரப்போமே .. என் ஐயப்பா
கார்த்திகை வந்தாச்சி மாலையும் போட்டாச்சி
ஊரெல்லாம் உந்தன் பெயராச்சி என் ஐயப்பா

சுவாமியே சரணம் ஐயப்பா
சுவாமியே சரணம் ஐயப்பா

எரிமேலி ஏற்றக்காண- எழுபிறவி பாவம் தீரும்
மாயனவன் பாதம் காண நாளும் நலமாகும் //

பலலட்சம் கோடி இங்கு மாந்தர் கூட்டம் கூடிடுதே
நதி எங்கும் கூடி நின்று ஓங்கி ஓங்கி தேடிடுதே //

அடடா அந்த மலையில் ஐயன் ஜோதியை
காண்பது புனிதம் புனிதம்.. (காடென்ன மேடென்ன)

ஜனனத்தின் மௌனம் அவனே
ஜகமெழுப்பும் நாதம் அவனே
கடல்வாலும். காற்றும். புயலும்
மலையும் ஐயப்பனே //

அவனின்றி ஏதுமில்லை உலகம் இல்லை உயிரில்லை
ஹரியும், அந்த சிவனும் சேர்ந்த அழகுகிங்கு ஈடில்லை
(காடென்ன மேடென்ன)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்து பார்த்து பரவசமானேன்

பார்த்து பார்த்து பரவசமானேன் சுவாமி
பார்த்த பார்த்து பரவசமானேன்

காத்து பட்ட கற்பூரம் போலே ஓ பாதம் பார்த்து
கரைஞ்சே போனேன்
சேர்த்து வச்ச வார்த்தையை தொலைச்சேன். நான்
பேச்சிருந்தும் தனியா தவிச்சேன் //
நேத்து வச்ச விரதம் இந்த உடம்பு கரைஞ்சி போச்சி
உன்ன பார்த்து வச்ச பொழுதே ஏ மனசும் கரைஞ்சி போச்சி //
( நேத்து வச்ச விரதம் பார்த்து பரவசமானேன்)

வீட்டு சுவரில் ஆடும் ஓ படத்த பார்து நானும அட
ஏங்கி ஏங்கி அழுத என்ன எப்படி அய்யா இழுத்த

காட்டுக்குள்ளே கொழந்த நீ எப்படி இங்கே இருந்த
என கூட்டி வந்து நட தொறந்து குறுகுறுனு சிரிச்ச
ஓ சிரிப்ப பார்த்து சிந்தை சிதறி போச்சே அது படியில்
ஓடச்ச செதறு காய ஆச்சி

ஏ நாக்க சொழட்டி சொழட்டி நல்ல சரணம் போட மறந்தேன்
அந்த மேற்கு வானம் போலே இங்கு அழுது சிவந்து கிடந்தேன்.
பார்த்து பார்த்து

கட்டு சுமந்த பிறகும் இந்த கட்ட புனிதம் ஆச்சி
ஒன்ன கண்டு பிடிச்ச இரண்டு விழிக்கு தரிசனம் தான் பரிசு

மால கேட்ட எனக்கு நல்ல சோல கெடச்சி போச்சி
நாற்பது நாள் உழசதுக்கே கடவுளோட பேச்சி
ஒரு மந்திரத்தில் மாங்காய் கெட்ச்ச கதையாய் நான்
கேட்டவுன் கெடச்சிடியே அய்யா
அந்த பம்பை ஆத்து மீனா ஓ பாதம் கெடப்பேனே
என்ன போக சொல்லி சொன்னா நான் சும்மா
போயிடுவேனா
பார்த்து பார்த்து

காத்து பட்ட கற்பூரம் போலே ஓ பாதம் பார்த்து
கரைஞ்சே போனேன்
சேர்த்து வச்ச வார்த்தையை தொலைச்சேன். நான்
பேச்சிருந்தும் தனியா தவிச்சேன் //
நேத்து வச்ச விரதம் இந்த உடம்பு கரைஞ்சி போச்சி
உன்ன பார்த்து வச்ச பொழுதே ஏ மனசும் கரைஞ்சி போச்சி //
( நேத்து வச்ச விரதம் பார்த்து பரவசமானேன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாத மலைகள் எல்லாம்

ஏறாத மலைகள் எல்லாம் ஏறி வாரோம் ஐயப்பா
ஏறி வாரோம் ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

கார்த்திகை முதல் நாளில் மாலையிட்டோம் ஐயப்பா
மலையிட்டோம் ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

காடு மலைகள் எல்லாம் கடந்து வாரோம் ஐயப்பா
கடந்து வாரோம் ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

எரிமேலி பேட்டை துள்ளி ஆடி வாரோம் ஐயப்பா
ஆடி வாரோம் ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

அழுதா நதியினிலே குளித்து வாரோம் ஐயப்பா
குளித்து வாரோ ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

கல்லிவும் குன்றிலும் ஏறி வாரோம் ஐயப்பா
ஏறி வாரோம் ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

கரிமலை ஏற்றத்திலே வாரோம் ஐயப்பா
வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

கரிமலை இறக்கத்திலும் வாரோம் ஐயப்பா
வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

பெரியாணை வட்டத்திலே வாரோம் ஐயப்பா
வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

சிறியாணை வட்டத்யும் கடந்து வாரோம் ஐயப்பா
வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

பம்பா நதியினிலே குளிச்சி வாரோம் ஐயப்பா
குளிச்சி வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமூல கணபதியை வணங்கி வாரோம் ஐயப்பா
வணங்கி வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

நீலிமலை ஏற்றத்திலும் வாரோம் ஐயப்பா
வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

சரங்குத்தி மேட்டினிலே வாரோமே ஐயப்பா
வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

கருப்பண்ண சாமியையும் வணங்கி வாரோம் ஐயப்பா
வணங்கி வாரோமே ஐயப்பா
ஐயப்பா நீயே துணை சாமியே ஐயப்பா

## நிலாவில் ஒளிவீசும்

நிலாவில் ஒளி வீசும் நின்னுடைய
நீல வானம் ஐயா இந்த
உலகில் அனைவரையும் ஒன்றாக்கும
உந்தன் நாமம் ஐயா (நிலாவில் ஒளி)

மலைகள் கடந்து வந்தோம் ஐயப்பா
மன மிரங்கி வருவாய்
அலையும் மனதினிலே ஐயப்பா
அமைதி தாராயோ (நிலாவில் ஒளி)

வனங்கள் கடந்து வந்தோம்
எமக்கொரு மார்க்க மருளாயே
இருளை அகற்றிடவே என்வாழ்வில்
இன்பம் தாராயே (நிலாவில் ஒளி)

நியமாம் ஒன்றறியேன் தின்னடியார்
நிழலில் நின்றறியேன்
கயவன் நானறியேன் ஐயப்பா
கருணை புரயாயே (நிலாவில் ஒளி)

மதுரா புரி வதனா ஐயப்பா
மதன மோகனனே வணங்கும்
குரு முனிவர் நன் மொழியால்
மகிழும் சிவமணியே (நிலாவில் ஒளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாபர் சாமி பாடல்கள்

சாமியே ஐயப்போ
ஐயப்போ சாமியே

சாமியே ஐயப்போ
ஐயப்போ சாமியே

வாங்க சாமி வாங்க சபரிமலைக்கு போகலாம்
வாபர் சாமி சன்னதியில் பேட்டை துள்ளலாம்
வாங்க சாமி வாங்க சபரிமலைக்கு போகலாம்
வாபர் சாமி சன்னதியில் பேட்டை துள்ளலாம்

அரபு நாட்டு மண்ணிலே வந்தவர்
ஐயன் அருளாலே பேரும் புகழும் பெற்றவர்
வெள்ளை உள்ளம் படைத்த அந்த மகா வல்லவர்
ஐயன் அருளாலே வாபர் என்ற பெயர் பெற்றவர் வாங்க சாமி

கொல்லை அடிக்கும் நோக்கத்துடன் வந்தவர்
ஐயன் அருளாலே எருமேலி வாழ்ந்தவர்
எருமேலி பேட்டையிலே கோயில் கொண்டவர்
அந்த இஞ்சி பாறை கோட்டையிலே தெய்வமானவர் வாங்க சாமி

ஜாதி மத பாகுபாடு இல்லையே
நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளையே
வாங்க சாமி வாங்க எருமேலி பாருங்க
நல்ல ஒற்றுமையின் சிகரம் நம் வாபர் தானுங்க வாங்க சாமி

## லாகி லாகி

லாகி லாகி லாகி லாகி இல்லல்லோ
வார் முகமது பேரெல்லோ
எரிமேனி நாங்கள் வந்தல்லோ
கரும் புள்ளி செம்புள்ளி இட்டல்லோ (லாகி லாகி)

மணிகண்டன் நண்பர் ஆனவரே
மாமலை மாமணி யானவரே
அஞ்சா நெஞ்சம் கொண்டவரே
அல்லாவின் இறையடி சென்றவாரோ (லாகி லாகி)

எதிர்த்தவர் யாரையும் வென்றவரே
இல்லாதவர்க்கு தந்தவரே
இஞ்சிப்பாறையில் தந்தவரே
எரிமெலியில் குடி கொண்டவரே (லாகி லாகி)

வீரமும் தீரமும் கொண்டவரே
எருமெலி கோட்டை ஆண்டவரே
முன்னும் பின்னும் துணைவருவீர்
கன்னிமார்களை காத்திடுவீர் (லாகி லாகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாபர் சாமி

பள்ளி வாசலில் படித்தவரே
பாங்கோசையை கேட்டவரே
அல்லாவின் வழியில் வந்தரே
எங்கள் ஐயப்பன் அருளை பெற்றவரே

அல்லாவு அக்பர் அல்லா அல்லா
எல்லோரும் வாழனும் நல்லா நல்லா

அன்புள்ளம் கொண்ட இறைவோனே
அன்பரை காக்கும் வல்லோனே
ஐயப்பன் வாழும் காட்டினிலே
முழு கோட்டையை அமைத்த பெருமானே - பள்ளி வாசலில்

என்றும் உன்னை தொழுதிடுவோம்
எக்கணம் உன்னை வணங்கிடுவோம்
வாபர் உன்னை தொழுதாலே
வசநதம் வாழ்வில் வந்திடுமே - பள்ளி வாசலில்

ஆட்ங்கள் ஆடி வந்திடுவோம்
பேட்டை துள்ளி மகிழ்ந்திடுவோம்
ஐயனை காண செல்கின்றோம்
துணையாய் காட்டில் வரவேண்டும் - பள்ளி வாசலில்

அல்லாவு அக்பர் அல்லா அல்லா
எல்லோரும் வாழனும் நல்லா நல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடுராஜா

ஆடுராஜா பிரவு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரவு நாகராஜா -எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா

சரண கோஷம் பேட்டுவரும் பக்தரபாரு
சன்னதிய நாடிவரும் கூட்டத்த பாரு
ஐயப்பனை பாடும் கன்னி சாமியப்பாரு
காட்டில் கருணையுடன் வழி நமக்க கொடுத்திடும் பாரு

அழைக்கட்டுமா சுவாமி அழைக்கட்டுமா
இந்த ஐயப்பன் பஜனைக்கு அழைக்கட்டுமா
இந்த பக்தர்கள் குறை தீர்க்க அழைக்கட்டுமா
நம்ம சுவாமிமார்கள் முகம் பார்க்க அழைக்கட்டுமா

ஓடிவா ஐயப்பா ஓடிவா சாமி
நீ ஓடிவா ராஜா நீ ஓடிவா கண்ணா
உன் சன்னிதானம் தான் கடந்து ஓடிவா சாமி
உன் 18ஆம் படி தாண்டி ஓடிவா சாமி
பம்பா நதிகடந்து ஓடிவா சாமி
அழுதா நதிகடந்து ஓடிவா சாமி
இந்த 18படி தாண்டி ஓடிவா சாமி

## கருப்பன் வாரான்

கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கறுப்பசாமி
அவன் கார்மேகம் போல வாரான் கறுப்பசாமி
முக்கொண்டைக்காரன் வாரான் கறுப்பசாமி
அவன் முன்கோபக்காரன் வாரான் கறுப்பசாமி
பம்பா நதி காவல்காரன் கறுப்பசாமி
அந்த பதினெட்டு படிகாவல் கறுப்பசாமி
சந்தனப்பொட்டுக்காரன் கறுப்பசாமி
அந்த சபரிமலை காவல்காரன் கறுப்பசாமி
கச்சையைக் கட்டிவாரான் கறுப்பசாமி
அவன்கை அறுவாள் கொண்டு வாரான் கறுப்பசாமி
வில்லுபாட்டு பாடி வாரான் கறுப்பசாமி
அவன் விதவிதமாய் ஆடிவாரான் கறுப்பசாமி
மீசையை முறுக்கி வாரான் கறுப்பசாமி
அவன் முச்சந்தியில் ஆடி வாரான் கறுப்பசாமி
பந்தம் கையில் பிடித்து வாரான் கறுப்பசாமி
அவன் பரிவேட்டை யாடிவாரான் கறுப்பசாமி
முந்தியில் உருமாறும் கறுப்பசாமி
அவன் முகத்தழகை காட்டிவாரான் கறுப்பசாமி
சந்தனத்தை பூசிவாரான் கறுப்பசாமி
அவன் சரண கோஷம் போட்டு வாரான் கறுப்பசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்க கருப்பசாமி

எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பசாமி //
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி

அக்கினியில் பிறந்தவராய் அரனாரின் மைந்தனவன்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பசாமி
முன்கொண்டைக்காரன் அவர் முன்கோபக்காரன் அவன்
சந்தனப் பொட்டுக்காரன் சபரிமலைக் காவல்காரன்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி //

சடைமுடிக்காரன் அவர் சாமிகளைக் காத்திடுவார்
சல்லடையைக் கட்டிவாரான் சாய்ந்து சாய்ந்து ஆடிவாரான்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி //

வில்லுப்பாட்டு பாடிவாரான் விதவிதமாய் ஆடிவாரான்
பந்தம் கையில் பிடித்து வாரான் பாரிவேட்டை ஆடிவாரான்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி //

அச்சங்கோயிவ் ஆண்டவரக்கு எதிரான இருப்பவராம்
பதினெட்டுப் படிகளுக்கு காவலாக இருப்பவராம்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி //

கச்சபையைக் கட்டிவாரான் கை அரிவால் காட்டி வாரான்
ஏய் மீசையை முறுக்கிவாரான் முச்சந்தியில் நடந்துவரான்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி //

கற்பூர ஆமிமுன்னே கடவுளாக நின்றிடுவார்
ஏய் கறுப்பு வேட்டி கட்டிக்கிட்டு பாவங்களைப் போக்கிடுவார்
எங்க கருப்பசாமி அவர் எங்க கருப்பண்ணசாமி //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்மையிலே குளித்து வாரான் கருப்பசாமி

பாங்காக வாரான் ஐயா கருப்பசாமி

அந்தா வாரான் இந்தா வாரான் கருப்பசாமி

பெரியானை வட்டம் வாரான் கருப்பசாமி

சிறியானை வட்டம் வாரான் கருப்பசாமி

கரிமலையில் ஏறிவாரான் கருப்பசாமி

பகவதியை வணங்க வாரான் கருப்பசாமி

காயிலத்தோடு வாரான் கருப்பசாமி

இலவந்தாவனம் கடந்து வாரான் கருப்பசாமி

சாமி முக்குழியை தாண்டி வாரான் கருப்பசாமி

அழுதாமேடு உச்சிவாரான் வாரான் கருப்பசாமி

சாமி அழுதையிலே குளிக்க வாரான் கருப்பசாமி

காளைகட்டி தொட்டு வாரான் கருப்பசாமி

சாமி பூங்காவனம் புகுந்து வாரான்கருப்பசாமி

எருமேலி வாரான் ஐயா கருப்பசாமி

எடுத்துவைக்கும் கால்களுக்கு சாமந்தி சல்லடையாம்

முன்னே வைக்கும் கால்களுக்கு முல்லைப்பூ சல்லடையாம்

பின்னே வைக்கும் கால்களுக்கு பிச்சுப்பூ சல்லடையாம்

அகலவைக்கும் கால்களுக்கு அலரிப்பூ சல்லடையாம்

துள்ளி வைக்கும் கால்களுக்கு துளசியாலே சல்லடையாம்

வீசி வைக்கும் கால்களுக்கு வில்வத்தாலே சல்லடையாம்

உள்ளே வைக்கும் கால்களுக்கு அறுகம் சல்லடையாம்

உச்சந்தலை காட்டி வாரான் கறுப்பசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிநடைச் சரணம்

| | |
|---|---|
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| சாமிசரணம் | ஐயப்பசரணம் |
| ஐயப்பசரணம் | சாமிசரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| குன்றும் குழியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | குன்றும் குழியும் |
| ஏத்திவிடப்பா | தூக்கிவிடப்பா |
| தூக்கிவிடப்பா | ஏத்திவிடப்பா |
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| வில்லாளிவீரனே | வீரமணிகண்டனே |
| வீரமணிகண்டனே | வில்லாளிவீரனே |
| ராஜாதிராஜனே | ராஜகுமாரனே |
| ராஜகுமாரனே | ராஜாதிராஜனே |
| பூலோகநாதனே | பூமிப்பிரபஞ்சனே |
| பூமிப்பிரபஞ்சனே | பூலோகநாதனே |
| யாரைக்காண | சாமியைக் காண |
| சாமியைக்கண்டால் | மோட்சம் கிட்டும் |
| தேவனே | தேவியே |
| தேவியே | தேவனே |
| தேவன் பாதம் | தேவி பாதம் |
| தேவன் சரணம் | தேவி சரணம் |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| பகவான் சரணம் | பகவதி சரணம் |
| பகவதி சரணம் | பகவான் சரணம் |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| ஈஸ்வரன் பாதம் | ஈஸ்வரிபாதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ம் படி பூப் பாடல்

01 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
பவளமல்லி பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா
தன்னான்னே தன்னான்னே திந்தக்க
திந்தக்க திந்தக்கத்தோ

02 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
செவ்வந்தி பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா

03 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
செம்பருந்தி பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

04 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
குங்குமப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

05 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
சம்மங்கி பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

06 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
தும்பைப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
அரளிப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

08 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
இருவாச்சி பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

09 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
மனோரஞ்சிதம் பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

10 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
கனகாம்பரம் பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

11 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
சாதிப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

12 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
மல்லிகைப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

13 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
தும்பைப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
செண்பகப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

15 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
நந்தியாவட்டை பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

16 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
ரோஜாப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

17 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
முல்லைப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)

18 பாடி தோட்டத்திலே பூப்பறிப்பது யாரப்பா
பூப்பறிப்பது ஐயப்பா
பூப்பறிப்பது சுவாமியே
தாமரைப்பூ பறித்துத் தாரேன்
எங்ககூட வாரியா (தன்னான்னே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலையில் இரவு நடை சாத்தும் போது பாடும் சாஸ்தா அஸ்டகம்

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

01 ஹரிவரசனம் சுவாமி விஸ்வ மோஹனம்
ஹரிதத்தீஸ்வரா சுவாமி ஆராத்ய பாதுகம்
அரிவிமர்த்தனம் சுவாமி நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

விளக்கம்

02 சரண கீர்த்தனம் சுவாமி சக்தமானஸம்
பரண லோலுபம் சுவாமி நர்த்தநாலஸம்
அருணாபாஸ®ரம் சுவாமி பூதநாலயஸம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

03 ப்ரணய சத்யகா சுவாமி பிராண நாயகம்
பிரணத கல்பகம் சுவாமி சுப்ரபாஞ்சிதம்
பிரணவ மந்திர சுவாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

04 துரக வாகனம் சுவாமி சுந்தரானனம்
வரகதாயுதம் சுவாமி வேதவர்ணிதம்
குரு கிருபாகரம் சுவாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

05 திரிபுவனார்ச்சித்தம் சுவாமி தேவதாத்மகம்
திரிணயனப் பிரபும் சுவாமி திவயதேசிகம்
திரிச பூஜிதம் சுவாமி சிந்திதப்ரம்
ஹரிஹராத்மஜம் சுவாமி தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06 பவபயாபஹம் சுவாமி பாவுகாவஹம்
புவன மோஹனம் சுவாமி பூதிபூஷணம்
தவள வாகனம் சுவாமி திவ்ய வாஹணம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

07 கலமிருதுஸ்மிதம் சுவாமி சுந்தரானனம்
கலப கோமளம் சுவாமி காத்ரமோஹனம்
கலப கேஸரி சுவாமி வாஜிவாஹனம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

08 ச்ரிதஜனபரியம் சுவாமி சிந்திதப்ரிதம்
ச்ருதிவிபூஷணம் சுவாமி ஸாதுஜீவனம்
சுருதி மனோஹரம் சுவாமி கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே (சரணம் ஐயப்பா)

## மங்களம்


வில்லாளி வீரனுக்கும் வீர மணிகண்டனுக்கும்
சத்குரு நாதனுக்கும் மங்களம் மங்களம் மங்களம்
ஜெய் ஜெய் மங்களம் மங்களம் மங்களம் //

பம்பா வாசனுக்கும் பந்தளத்து குமரனுக்கும்
சத்குரு நாதனுக்கும் மங்களம் மங்களம் மங்களம்
ஜெய் ஜெய் மங்களம் மங்களம் மங்களம் //

வில்லாளி வீரனுக்கும் வீர மணிகண்டனுக்கும்
சத்குரு நாதனுக்கும் மங்களம் மங்களம் மங்களம்
ஜெய் ஜெய் மங்களம் மங்களம் மங்களம் //


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் சிறப்பாக வெளிவர
வாழ்த்துகின்றோம்



திருமதி. இளஞ்செலியன் குடும்பத்தார்
ஹாலியேல.




சிறப்பு தரிசன மலர்
அழகுற வெளிவர
எனது வாழ்த்துக்கள்



கணேசன் சிபார்சன் குடும்பத்தார்
ராகலை பஜார்– ஹல்கரனோய
077–2028499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ் நூல் சிறப்பாக வெளிவர
எனது மனமார்ந்த
வாழ்த்துக்கள்.

**S. YOGESH**

Silver Kandy Estate,
Halgranoya.

Tel: 077-3700073

*With Best Wishes from*

# S.K. AGRO

**Dealers in Vegetable Seeds, Seed Potatoes,**
**Agro Chemicals & Fertilizers**



**No.05, New Bazaar, Ragala, Halgranoya.**
**Tel: 072-5579810**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes from*

# VIKAASH.COM

**Dealers in Gift Items, Sports Items,**

**No.05, Old Bus Stand,**
**Ragala.**
**Tel:071-7226633, 052-562666**

## Ragala Phone Shop

**Phone Cover, Cosmetic, Card & Reload**

**No.07, Old Bus Stand,**
**Ragala.**
**Tel: 071-7226633, 077-1155335**



*With Best Wishes from*

# A. KANAGARAJ

**STAFFORD, RAGALA.**

**Three Wheel**
**for**


# HIRE

**Tel: 071-2105537**
**076-7895657**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes from*

# SOLID

**General Hardware & Glass House**

**Old Bus Stand Road, Ragala**
**Halgranoya.**

Tel :052-2265502, 071-9142025
E-Mail: ruzly4u@gmail.com
ruzly4u@yahoo.com



**Vehicle Auto Paints**


**Paints, Cement ,Steel Tore, PVC Pipes Electric Cables**
**Aluminum Fitting G.I, Sheets Glass Asbestos Sheets Tiles.**

# SOLID BAKERS

**No.22,**
**Udapussellawa Road,**
**Ragala.**

*With Best Wishes from*

# Asoka Radio's



**No.26, Old Bus Stand,**
**Ragala, Halgranoya.**

**Tel: 0776-560633**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes from*



# N.R.V. TRADERS

**No.45, Police Road,**
**Ragala Bazaar,**
**Halgranoya.**

**076-5353533**
**072-9677367**

*With Best Wishes from*

கொரியாவில் வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும்

ஆண், பெண் இருபாலருக்குமான சிறந்த வாய்ப்பு

## KOREAN LANGUAGE ACADEMY

2018 ஆம் ஆண்டில் கொரியன் மொழி EPS TOPIK பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்கள் நுவரெலியா

2018 වර්ෂයේ කොරියානු භාෂා EPS TOPIK විභාගයෙන් අතිවිශිෂ්ට ලකුණු ලබා ගත් සිසුන් නුවරඑළිය



O/L A/L

**More Details**

S.Jaganth (Korean Language Lecturer)
Contact - 0774482446
Science Academy
#109, Kandy Road Nuwara Eliya.

அசிரியர்

# திரு. எஸ். ஜகந்த்

முதல் நாள் இலவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*With Best Wishes from*

SMR
CONSOLIDATED

Sena Mills Refineries (Pvt.) Ltd.

No. 40, New Kelani Bridge Road,
Orugodawatta, Wellampitiya, Greater Colombo, Sri Lanka.
Tel : +94112424776 Fax : +94112323776
Email : info@smrconsolidated.com
www.smrconsolidated.com


ISO 22000 | GMP | HACCP | JAS Control Union Certifications | USDA ORGANIC | Kosher-Parve Hager Kashru

*Refiners, Manufacturers & Exporters of Edible Oil & Fats*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகிய ஐயனை வணங்கி ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் குருபூஜையில் கலந்து சிறப்பிக்கும் சுவாமிமார்களுக்கும் அடியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் வருடந்தோரும் ஐயப்ப பூஜையில் அன்னதான உபயம் வழங்கும்

கார்த்திகை முதல் நாள் - நுவரெலியா, கவிதாஸ் நிறுவன உரிமையாளர் திரு. கவிதாஷன்

கன்னி பூஜை - நுவரெலியா, GSP Traders நிறுவன உரிமையாளர் திரு. பிரதீப்


குருபூஜை - கொழும்பு, ஸ்ரீ விஜயாஸ் நிறுவன உரிமையாளர் திரு. கனகராஜ்

ஆகியோர்களுக்கும் ஸ்ரீ சபரிகிரிவாஷா மலர் சிறப்புற வெளிவர உதவி புரிந்த விளம்பரதாரர்களுக்கும் வருடந்தோரும் அன்னதானத்திற்கு உதவி புரியும் அடியவர்களுக்கும் ஸ்ரீ சபரி யாத்திரை குழுவினர் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீ சபரி யாத்திரை குழு
இராகலை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




SRIVIJAYAS

# SRI VIJAYAS

**No.118, Main Street, Colombo.11**

**Tel :011-2449373**
**Skype: srivijayas, Web: www.srivijayas.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**KAVITHAS COMPLEX**
C-2, Lawson Street,
Nuwara Eliya.
Tel: 052-2222419, 052-2223234,
Fax: 052-2235507

**KAVICO TRADERS**
No,189, Keyzer Street,
Colombo.11.
Tel: 011-2331620

apeksha ne 2223140

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org